
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 29, 2021

புதன்கிழமை, 29 செப்டெம்பர் 2021 | ஒளி: 07 கதிர் 113 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## அரிசி விலைகளை பாருங்கள்

அரிசி மீது விதிக்கப்பட்டிருந்த அதிகபட்ச நிர்ணய விலை நீக்கப்பட்டதன் பின்னர், அரிசி வகைகளின் சில்லறை விலைகளை அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

புதிய சில்லறை விலை தொடர்பில் அச்சங்கத்தின் தலைவர் டட்லி சிறிசேன, நேற்று (28) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அறிவிப்பொன்றை விடுத்தார். அதன்பிரகாரம்,

**ஒரு கிலோகிராம் நாட்டரிசி 115 ரூபாய்**

**ஒரு கிலோகிராம் சம்பா அரிசி 140 ரூபாய்**

**ஒரு கிலோகிராம் கீரி சம்பா அரிசி 165 ரூபாய்**



## அடுத்தது என்ன? வெள்ளி இறுதி

மகேஸ்வரி விஜயனந்தன்

நாட்டைத் திறப்பது தொடர்பில் வெள்ளிக்கிழமை நடைபெறும் கொவிட்-19 தொற்றொழிப்பு ஜனாதிபதி செயலணி கூட்டத்திலேயே உரிய தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஸ் பத்திரண, நாட்டின் தற்போதைய நிலையில், தொற்றாளர்கள், தொற்று மரணங்கள், ஒட்சிசனைப் பெறும் நோயாளர்கள் ஆகிய எண்ணிக்கைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தான் நம்புவதாகத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



தடுப்பூசியில் இரண்டு டோஸ்களையும் ஏற்றிக்கொண்டீர்களா?

# சட்டமில்லா சோதனை

**ஷவேந்திர தெரிவிப்பு; இரவு ஊரடங்குக்கு ஜனாதிபதி பணிப்பு என்கிறார்.**

ஷேன் செனவிரத்ன

பொது இடங்களுக்குச் சென்றுவரும், உலாவும் நபர்கள், கொரோனா தடுப்பூசியில் இரண்டு டோஸ்களையும் பெற்றிருக்க வேண்டுமென்பது இன்னுமே சட்டமாக்கப்படவில்லை. என்றாலும் அதுதொடர்பில், எதிர்காலத்தில் முறையாக சோதனை செய்யப்படும் என, கொவிட்-19 செயலணியின் பிரதானியான இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தின் 72 ஆவது நிறைவையொட்டி, இராணுவ படையணிகளின் 24 கொடிகளும் கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் வைத்து ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2

## யாழ். மாநகர சபையில் திலீபனுக்கு அஞ்சலி

**புறக்கணித்தது ஈபிடிபி**



எஸ். நிதர்ஷன்

யாழ்ப்பாணம் மாநகர சபை அமர்வில் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்ட அதேவேளை, பொலிஸாரின் செயற்பாடுகளுக்கு எதிராக கண்டன தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### வெள்ளைப்பூண்டு மோசடி விவகாரம்

## ஊடகவியலாளர்களை சி.ஐ.டிக்கு அழைத்தமை தவறு

**வருந்தியது அரசாங்கம்: பிரதமரும் தலையிட்டார்**

மகேஸ்வரி விஜயனந்தன்




நாட்டில் இடம்பெற்ற வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில், பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை அடிப்படையாக வைத்து, ஊடகவியலாளர்கள் சிலரை, குற்றப்புலனாய்வு பிரிவுக்கு விசாரணைக்கு அழைத்துள்ளமை தொடர்பில் தான் முதலில் கவலையடைவதாகத் தெரிவித்துள்ள அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும, இந்தச் சம்பவத்தை அரசாங்கம் என்ற ரீதியில் நிராகரிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### மன்னார் பிரதேச சபை விவகாரம்:

## இன்றைய புதிய தெரிவை எதிர்த்து நேற்று ரிட் மனு; இன்று விசாரணை



மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் பதவியிலில் இருந்தும் அங்கத்தவர் பதவியிலிருந்தும் தன்னை நீக்கியமையை சவாலுக்கு உட்படுத்தியும் புதிய தவிசாளர் தெரிவை இடைநிறுத்தக் கோரியும் முன்னாள் தவிசாளர் சாகுல் ஹமீது முஹம்மது முஜாஹிர் சார்பில், அவரது சட்டத்தரணிகளால், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று (28) ரிட் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2

## இராதா அழைக்கிறார்

டி.ஷங்கீதன்



பல்வேறு காரணங்களால் மலையக மக்கள் முன்னணியில் இருந்து வெளியேறியவர்கள் தங்களுடைய தவறை உணர்ந்து மீண்டும் கட்சியுடன் இணைந்து செயற்பட முடியும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## வானத்தை நோக்கி சுட்டு வாளைப் பிடுங்கினர்

எஸ். நிதர்ஷன்

யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியில், மது போதையில் அட்டகாசம் புரிந்த இளைஞன் ஒருவரை, மேல் வெடி வைத்து, பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில், செபஸ்ரியன் வீதி பகுதியில் உள்ள வீடொன்றில், நேற்று (28), மது போதையில் இளைஞன் ஒருவர், தாய் மீதும் வீட்டிலிருந்தோர் மீதும் தாக்குதல் நடத்தி, அட்டகாசம் புரிந்துள்ளார். இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அயலவர்கள் தகவல் வழங்கியதை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், குறித்த இளைஞனை கைது செய்ய முயற்சித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## எரிபொருள் தட்டுப்பாடு இல்லை

மகேஸ்வரி விஜயனந்தன்

நாட்டில் எவ்வித எரிபொருள் தட்டுப்பாடும் இல்லை எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஸ் பத்திரண, இது தொடர்பில் எவ்வித பயமோ, அச்சத்தையோ நாட்டு மக்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம் என்றும் எரிபொருள் இறக்குமதிக்குத் தேவையான ஏற்பாடுகள் அரசாங்கத்திடம் உள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

## 'சூம்' இல் பயின்ற சிறுமி சடலமாக மீட்பு

**பல கோணங்களில் விசாரணை**

வா.கிருஸ்ணா



மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து சிறுமி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### வாகன இறக்குமதி தொடர்பில்

## ஓர் அனுமானம்

மகேஸ்வரி விஜயனந்தன்

வாகன இறக்குமதி தொடர்பில், கொள்கை ரீதியான எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும, சில வேளைகளில் இறக்குமதி தொடர்பான சட்டத்தை மாற்ற முடியுமா என்பது தொடர்பான ஓர் அனுமானத்தை மாத்திரமே மத்திய வங்கி ஆளுநர் முன்வைத்திருக்கலாம் என்றார்.

தொடர்ச்சி P2

## குடியகல்வு வரி நீக்கம்

மத்தள ராஜபக்‌ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு நேர அட்டவணைக்கு அமைவான விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ள சுற்றுலாத்துறை அமைச்சு, விமானப் போக்குவரத்துக் கம்பனிகளை கவர்ந்திழுக்கவும் தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

### சந்தஹிருசாய தூபிக்கு

## அறங்காவலர் சபை

முப்பது வருடகாலத்திற்கும் மேலாக இடம்பெற்ற கொடூர பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக உயிர்த் தியாகம் செய்த இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்களை நினைவுகூரும் வகையிலும், அவர்களுக்கு புண்ணியம் கிட்டும் வகையிலும் சந்தஹிருசாய தூபி நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

தொடர்ச்சி P2

## கட்டுக்கலையில் கைகலப்பு நால்வருக்குப் பாதிப்பு

பி.கேதீஸ்



தலவாக்கலை, கட்டுக்கலை தோட்டத்தில் இடம்பெற்ற கைகலப்பில் பாதிக்கப்பட்ட, இரண்டு பெண் தொழிலாளிகள் உள்ளிட்ட நால்வர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொழிலாளர்களுக்கும், தோட்ட உதவி அதிகாரி, உதவி வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு இடையே நேற்று (28) வாய்த்தகர்க்கம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## உருண்டோட துடிக்கிறது பாறை; உயிர் அச்சத்தில் கெட்டபுலா

ஆ.ரமேஸ்

கொத்மலை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கெட்டபுலா கொலனியில் இருக்கும் குடியிருப்பை நோக்கி, பாரிய கற்பாறையொன்று உருண்டுவிழும் அபாயத்தில் உள்ளது.

தொடர்ச்சி P2

## பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்யவும்

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று (28) சந்தித்தனர். நில அபகரிப்பு, பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்தல் மற்றும் தேசியப் பிரச்சினையை தீர்க்கும் வகையில் புதிய அரசியலமைப்பை உருவாக்குதல் போன்ற விடயங்கள் குறித்து, கலந்துரையாடியதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.



PAGE 1 தொடர்ச்சிகள்

## அடுத்தது என்ன? வெள்ளி இறுதி

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (28) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

தொற்றுக்கு உள்ளாகும் மற்றும் தொற்றின் அறிகுறிகளுக்கு உள்ளாகும் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இரண்டாவது தடுப்பூசி செலுத்தப்பட்டு 2 வாரங்களின் பின்னர், அவர்களின் உடலுக்குள் சாதகமான நோயெதிர்ப்பு சக்தி ஏற்படும் என கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி தலைமையில் கூடிய கொரோனா ஒழிப்பு செயலணி கூட்டத்தில், கலந்துகொண்ட வைத்தியர்களின் கருத்துகளை அமைச்சர் நினைவு கூர்ந்தார்.

இதற்கமைய, இவ்வாறு இரண்டு டோஸ்களையும் செலுத்தி நிறைவு செய்ததன் பின்னர், அறிவியல் ரீதியின் அடிப்படையில் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து நாட்டை திறக்க முடியும் என்றார்.

ஆனால் நாட்டை திறப்பது குறித்த இறுதித் தீர்மானம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறும் கூட்டத்தின் பின்னரே தீர்மானிக்கப்படும் என தெரிவித்த அவர், ஒக்டோபர் மாதத்தின் பின்னர், இலங்கை புதிய யுகத்தை நோக்கி பயணிக்கும் என எதிர்பார்ப்புடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

## ஊடகவியலாளர்களை சி.ஐ.டிக்கு அழைத்தமை தவறு

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (28) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**" ஊடகவியலாளர்களை குற்றப் புலனாய்வு பிரிவிற்கு அழைக்கக் கூடாதென பிரதமர் மஹிந்த, விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் சரத் வீரசேகரவிடம் வலியுறுத்தியுள்ளார்**

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக் கூடாது என்பதை மிகவும் பொறுப்புடன் அறிவிப்பதாகவும் குறிப்பிட்ட அவர், இந்த விசாரணை தொடர்பில் தான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஊடகவியலாளர்களை குற்றப் புலனாய்வு பிரிவிற்கு அழைக்கப்படக் கூடாதென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் சரத் வீரசேகரவிடம் வலியுறுத்தியதாகவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இந்த விடயத்தில் ஏதோ தவறு நடந்துள்ளது என தெரிவித்த அவர், வெள்ளைப்பூண்டு விவகாரம் தொடர்பில், அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் இராஜாங்க அமைச்சருக்கு எதிராக அதிகாரியொருவர் விரல் நீட்டியதால், இது தொடர்பில் அமைச்சர் பந்துல குணவர்தன முறைப்பாடு செய்தார். ஆனால் அவர் எந்தவோர் ஊடகவியலாளருக்கு எதிராகவும் முறைப்பாடு செய்யவில்லை என்றார். அமைச்சர் பந்துல குணவர்தன அவ்வாறானதொரு மோசடி அரசியல்வாதி இல்லை என்பதால், இவ்வாறான முறைப்பாட்டை செய்துள்ளார். எனவே, முன்னாள் ஊடகவியலாளர் என்ற ரீதியில் ஊடகவியலாளர்களை குற்றப்புலனாய்வு பிரிவுக்கு அழைப்பதில் தான் இணங்கப்போவதில்லை என்றார்.

## எரிபொருள் தட்டுப்பாடு இல்லை

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (28) இடம்பெற்ற அமைச்சரவை சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்துள்ள அவர்,

நாட்டில் அந்நிய செலாவணி நெருக்கடி உள்ளமை இரகசியமல்ல. இது தொடர்பில் நிதியமைச்சர் தெளிவாக அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், குறித்த அந்நிய செலாவணி நெருக்கடிக்கு பிரதான காரணம், இரண்டு வருடங்களாக இந்த நாட்டின் 7 டொலர் பில்லியன் சுற்றுலா வருமானம் இன்மையாகும் என்றார்.

எனவே வரும் காலாண்டில் நாட்டில் சுற்றலா துறை வளர்ச்சியடைந்து, அதன் மூலம் அந்நியசெலாவணி நெருக்கடிக்கு தீர்வு கிடைக்கும் என நம்புவதாகவும் மீண்டும் இலங்கையை இயல்பான நிலைக்கு கொண்டு வருவதன் ஊடாக நாட்டில் மீண்டும் வெளிநாட்டு முதலீடுகள் உள்ளிட்ட விடயங்கள் கிடைக்கும் என நம்புவதாகத் தெரிவித்தார்.

# சட்டமில்லா சோதனை

அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

30 வயதுக்கு மேற்பட்டவர்கள் சிறிய குழுவினரைத் தவிர, ஏனையோருக்கு இரண்டு தடுப்பூசிகளும் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த அவர், பொது இடங்களுக்குச் சென்றுவருபவர்கள், இவ்விரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்டிருப்பது உகந்தது என்றார்.

12-19 வயதுகளுக்கு இடைப்பட்ட, பல்வேறான நோய்களுக்கு உட்பட்டிருக்கும், சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் சில மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்னும் சில நாள்களுக்குள் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்படும் என்றார்.

ஒக்டோபர் 1ஆம் திகதி முதல் நாடு திறக்கப்படுமாயின், இரவு 10 மணிமுதல் அதிகாலை 4 மணிவரையிலும் தனிமைப்படுத்த ஊடரங்குச் சட்டம் அமல்படுத்தப்படவேண்டும் என ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் எனத் தெரிவித்த இராணுவத் தளபதி, இதுதொடர்பில் பல மட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார் என்றார்.

நாட்டை திறந்தால், கொரோனா தொற்றை கட்டுப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான அறிவுரைகளை தயாரித்துக்கொள்ளுமாறு சுகாதார பணிப்பாளர் நாயகத்துக்கும், போக்குவரத்து துறையைச் சார்ந்தவர்களுக்கும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் என்றார்.

# இராதா அழைக்கிறார்

மலையக மக்கள் முன்னணியின் மத்திய குழு கூட்டம் எனது தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கட்சியின் செயலாளர் நாயகமும் பேராசிரியருமான சங்கரன் விஜயசந்திரன். மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் ஏ.லோரன்ஸ் மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச் செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் உட்பட உயர்பீட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார கொரோனா நிலைமை தொடர்பாகவும் அரசியல் நிலைமை தொடர்பாகவும். அதே நேரத்தில் இந்த கொரோனா காரணமாக அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள எங்களுடைய பெருந்தோட்ட தொழிலாளர்களின் நிலைமை தொடர்பாகவும் கொழும்பில் இருந்து தங்களுடைய வேலைகளை இழந்திருக்கின்ற இளைஞர் யுவதிகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் முடக்க நிலை விடுபடுகின்ற சந்தர்ப்பத்தில் எங்களுடைய இளைஞர் யுவதிகள் மீண்டும் எவ்வாறு தங்களுடைய வேலைத் தளங்களுக்கு செல்வது அதன்போது அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாகவும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் தோட்ட கம்பனிகளால் தொடர்ந்தும் பழிவாங்கப்பட்டு வருவது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டதுடன் இதற்கு எவ்வாறு தீர்வை பெற்றுக் கொடுப்பது என்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போதே மலையக மக்கள் முன்னணியில் கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களால் வெளியில் சென்றவர்கள் தங்களுடைய தவறுகளை உணர்ந்து மீண்டும் கட்சியில் இணைந்து செயற்பட முடியும் என்பதை அனைத்து மத்திய குழு உறுப்பினர்களும் ஏகமனதாக தீர்மானித்ததுடன் அவ்வாறான ஒரு நிலையில் கட்சி எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பிலும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக கட்சியின் கொள்கையுடன் இணைந்து செயற்பட விரும்புகின்றவர்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ள குழுவுடன் தொடர்பு கொண்டு மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

எனவே தவறு செய்தவர்கள் தங்களுடைய தவறை உணர்ந்து மீண்டும் கட்சியுடன் இணைந்து செயற்பட முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கட்டுக்கலையில் கைகலப்பு நால்வருக்கு பாதிப்பு

அதனையடுத்து ஏற்பட்ட கைகலப்பு காரணமாகவே, இந்த நால்வரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தோட்ட உத்தியோகஸ்தர்கள் இருவரும் நுவரெலியா வைத்தியசாலையிலும், பெண் தொழிலாளிகள் இருவரும் லிந்துலை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெளியாட்களை கொண்டுவந்து, கொழுந்து பறிக்க செய்யும் கட்டுக்கலை தோட்ட நிர்வாகம், அவர்களுக்கு 1,000 ரூபாய் சம்பளம் வழங்குவதாகவும் அதேதோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஒரு கிலோகிராம் கொழுந்துக்கு 40 ரூபாய் வழங்கி அன்றாடம் பறிக்கும் கொழுந்தின் நிறைக்கு ஏற்பவே சம்பளம் வழங்குவதாகவும் தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நாளொன்று 19 கிலோகிராம் தேயிலைக் கொழுந்து பறித்தாலும் 1,000 ரூபாய் சம்பளம் வழங்கப்படுவதில்லை என அத்தோட்ட தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டுக்கின்றனர். ஆண் தொழிலாளர்கள் 8 மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டும் என தோட்ட நிர்வாகத்தினர் கெடுபிடி விதிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான பல பிரச்சினைகள் தொடர்பாக தோட்டத் தொழிலாளர்களுக்கும் தோட்ட நிர்வாகத்துக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கமே கைகலப்பாக மாறிவிட்டது.

இதனை கண்டித்து, தொழிலாளர்கள் நேற்று (28) வேலை நிறுத்தத்தில் குதித்தனர். அத்துடன் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் தலவாக்கலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மத்தளவுக்கு குடியகல்வு வரி நீக்கம்

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில், சர்வதேச விமானப் போக்குவரத்துக் கம்பனிகளை குறித்த விமான நிலையத்திற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் தினத்திலிருந்து விமான நிலைய குடியகல்வு வரியை இரண்டு (02) வருடங்களுக்கு முழுமையாக விடுவிப்பதற்கும் யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்துவரும் 04 வருடங்களுக்கான விமானங்கள் தரையிறக்கம் மற்றும் தரிப்புக் கட்டணங்களுக்கான விலைக்கழிவுகளை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான யோசனை சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## வாகன இறக்குமதி தொடர்பில் தீர்மானமில்லை; ஓர் அனுமானம்

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (28) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இதேவேளை, துறைமுகத்தில் தேங்கியிருக்கும் அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய கொள்கலன்களை விடுவிக்க, 50 மில்லியன் டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

அதற்கமைய, சந்தைக்குள் காணப்படும் சில பொருள்களின் தட்டுப்பாட்டை குறைப்பதற்காக, வாழ்க்கைச் செலவு தொடர்பான உப-குழு அமைச்சரவையில் முன்வைத்த அறிக்கைக்கு அமைய, எடுக்கப்படும் ஒரு நடவடிக்கையாக குறித்த கொள்கலன்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றார்.

## உருண்டோட துடிக்கிறது பாறை; உயிர் அச்சத்தில் கெட்டபுலா

எப்போது வேண்டுமானாலும் உருண்டு விழும் நிலையில் இருப்பதால், அங்கு வசிக்கும் 8 குடும்பங்களைச் சேர்ந்த 40 குடியிருப்பாளர்கள் வீடுகளிலிருந்து வெளியேறி, உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

தாங்கள் முகங்கொடுக்கும் அபாய நிலைமைத் தொடர்பில், கொத்மலை பிரதேச செயலக இடர் முகாமைத்துவ பிரிவுக்கு அறிவித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், அப்பிரதேசத்துக்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகஸ்தர் மற்றும் கிராம சேவகர், ஸ்தலத்துக்கு விரைந்து நிலைமையை அவதானித்துள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக அடைமழை பெய்கிறது. கொத்மலை பிரதேசத்திலும் மூன்று நாள்களாக தொடர்ச்சியாக மழை பெய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாநகர சபையில் திலீபனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு, நேற்று (28) மாநகர சபை மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சபையின் ஆரம்பத்தில் தியாக தீபம் திலீபனுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன், தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் வைத்து, கடந்த 23ஆம் திகதியன்று, யாழ். மாநகர சபை உறுப்பினர் ரஜீவ்காந், யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை மற்றும் ஏற்றப்பட்ட தீபத்தை பொலிஸார் காலால் தட்டிவிட்டமை உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக கண்டன தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

சபையில் நடைபெற்ற தியாகி திலீபனின் அஞ்சலி நிகழ்வில், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் மாநகர சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய புதிய தெரிவை எதிர்த்து நேற்று ரிட்...

மன்னார் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவு இன்று (29) இடம்பெறவுள்ள நிலையில், குறித்த ரிட் மனு நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புதிய தவிசாளருக்கான தெரிவினை இடைநிறுத்தக் கோரியும், தவிசாளர் மற்றும் உறுப்புரிமையிலிருந்து தாம் நீக்கப்பட்டமை சட்டத்திற்கு முரணானது எனவும், அவற்றுக்கெதிராக தடையுத்தரவு பிறப்பிக்குமாறும் குறித்த ரிட் மனுவில் கோரப்பட்டுள்ளது.

தவிசாளர் முஜாஹிர் சார்பில், சட்டத்தரணிகளான என்.எம்.ஷஹீட், சந்தீப கம்மதிகே ஆகியோரினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு, இன்று (29) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தகுதியின்மைகள் உள்ளனவா என்பது பற்றிய விசாரணை அறிக்கையின் பிரகாரம், வடமாகாணத்தின் ஆளுநர் பியன்சியா சறோஜினிதேவி மன்மத ராஜா சார்ள்ஸின் கையொப்பத்துடன் கடந்த 13ஆம் திகதியன்று வெளியான வர்த்தமான அறிவித்தலின் பிரகாரம், மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் சாகுல் கமீது முஹம்மது முஜாஹிர், மறுநாள் நாள் செவ்வாய்க்கிழமை (14) தொடக்கம் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் சபை அங்கத்தவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வானத்தை நோக்கி சுட்டு வாளைப் பிடுங்கினர்

எனினும், அவ்விளைஞன் வீட்டில் இருந்த வாள் ஒன்றை எடுத்துக்கொண்டு, பொலிஸார் மீது தாக்குதலை மேற்கொள்ள முயற்சித்துள்ளார்.

அதனையடுத்து பொலிஸார் வானை நோக்கி எச்சரிக்கை வேட்டுக்களை தீர்த்து, இளைஞனை மடக்கி பிடித்து, கைதுசெய்துள்ளனர்.

அத்துடன், இளைஞனிடம் இருந்த வாளையும், பொலிஸார் மீட்டனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணகளை, பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## சந்தஹிருசாய தூபிக்கு அறங்காவலர் சபை

பாதுகாப்பு அமைச்சின் முழுமையான கண்காணிப்பின் கீழ் அநுராதபுரம் புனித பூமியில் நிர்மாணிக்கப்படும் அந்த தூபி 282 அடி மற்றும் 6 அங்குல உயரமுடையது.

இத்தூபியின் கட்டுமானப் பணிகள் பூர்த்தியடைந்த பின்னர் குறித்த பராமரிப்பு நடவடிக்கைகள், நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அறங்காவலர் சபையொன்றை நியமிப்பதற்கும், இத்தூபிக்கு உள்நாட்டு, வெளிநாட்டு பக்தர்கள் வழங்கும் கொடைகளை திரட்டுதல் மற்றும் பேணிச் செல்வதற்கான நிதியமொன்றை தாபிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்காக, பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 'சூம்' இல் பயின்ற சிறுமி சடலமாக மீட்பு

மட்டக்களப்பு அரசடி, பொற்கொல்லர் வீதியில் உள்ள வீடொன்றில் சிறுமியின் சடலம் கிடப்பதாக நேற்று முன்தினம் இரவு (27) கிடைத்த தகவல்களை தொடர்ந்து மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட சிறுமி, மட்டக்களப்பின் பிரபல பெண்கள் பாடசாலையில் தரம் 08 கல்வி பயிலும் 13 வயது சிறுமியென பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் மரணம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ தினத்தன்று மாலை பெற்றோர் வெளியில் சென்ற நிலையில், சகோதரிகள் இருவர் வீட்டிலிருந்துள்ளனர். 'சூம்' ( Zoom ) ஊடாக கற்றல் நடவடிக்கையில் தங்கை ஈடுபட்டுகொண்டிருந்துள்ளார்.

அக்கா குளியலறையில் இருந்துள்ளார். குளியலறையிலிருந்து வந்தபோது Zoom ஊடாக கற்றல் நடவடிக்கையிலிருந்த தங்கை தனது உயிரை மாய்த்துள்ள நிலையில் இருந்துள்ளதாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

சிறுமியின் மரண விசாரணையை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெட்னம் மேற்கொண்டார்.

அதனை தொடர்ந்து சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் – கடற்றொழில் அமைச்சர் சந்திப்பு

# ஆழ்கடல் விவகாரம் குறித்து எடுத்துரைப்பு



சர்வதேச நாடுகளின் கடல் எல்லைகளுக்குள் தவறுதலாக அல்லது சட்டவிரோதமாக நுழைகின்ற இலங்கையின் ஆழ்கடல் மீன்பிடிக் கலன்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவருக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெளிவுபடுத்தினார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று (28) நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சைய்பி தலைமையிலான குழுவினருக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர ஆகியோருக்கும் இடையிலான கலந்துரையாடலின் போதே மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தெளிவுபடுத்தப்பட்டது.

இச்சந்திப்பின்போது, ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுகின்ற இலங்கை கடற்றொழிலாளர்கள், எல்லைதாண்டிச் சென்று வெளிநாடுகளில் கைதாகின்ற சமயங்களில் குறித்த நாடுகளில் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள், பின்னர் அவர்கள் இலங்கைக்கு திரும்புகின்றபோது படகு உரிமையாளர்களுக்கு எதிராகவும் படகில் பணியாற்றிய தொழிலாளர்கள் மீதும் இலங்கையில் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள் போன்றவை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கேட்டறிந்து கொண்டார். இந்நிலையில், கடற்றொழில் அமைச்சினால் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆழ்கடல் மீன்பிடி கலன்களுக்கு VMS கண்காணிப்பு கருவிகளை பொருத்தும் செயன்முறையை சுட்டிக்காட்டிய கடற்றொழில் அமைச்சர், குறித்த செயற்றிட்டங்கள் நிறைவடைந்ததும் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுகின்ற இலங்கையின் பலநாள் கலன்களை சிறப்பாக கண்காணிக்க முடியும் எனவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தினார்.

இதுதவிர, மீன்பிடி தொடர்பான சர்வதேச நியமங்களுக்கு அமைய ஆழ்கடல் மீன்பிடி செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவது, மீன்பிடிக் கலன்களின் எண்ணிக்கையை வரையறை செய்வது தொடர்பாகவும் கடற்றொழில் அமைச்சு அவதானம் செலுத்தி வருவதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்துரைத்தார்.

போதைக்கு பணம் தர மறுத்த

## மனைவி மீது கணவன் தாக்குதல்

ஹெரோய்ன் போதைப்பொருளை வாங்குவதற்கு பணம் தர மறுத்த தனது கர்ப்பிணி மனைவியை கடுமையாகத் தாக்கி, அவரது உடலில் சுடு தண்ணீரை ஊற்றிய கணவனை பொலிஸார் கைது செய்துள்ளதாக கிரிபத்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் மனைவியின் கண்ணில் காயம் ஏற்பட்டுள்ளதால், கொழும்பு கண் சிகிச்சை வைத்தியசாலையில் மனைவி சிகிச்சை பெற்றுவருவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்டுள்ள கணவன் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளதாகவும், கணவனுக்கு 23 வயது. மனைவிக்கு 20 வயது எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மஹர நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## நடப்பதற்கு அல்ல; வாழ்வதற்கான வழியே தேவை

நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலைமைகளுக்கு செல்வது கண்ணுக்கு தெரிந்தும், அரசாங்கம் தரகு பணங்களை பெறுவதற்கான வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி, நாட்டு மக்களின் உயிர்களோடு விளையாடுவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் வாழ்வதற்கான வழியே தற்போது தேவை எனவும், நடப்பதற்கான பாதை தற்போது தேவையில்லை என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார்.

பிள்ளைகளின் கல்வியை கட்டியெழுப்புவதற்கான வழி, விவசாய மக்களுக்கான வழி, வாழ்வாதாரத்தை இழந்துள்ள மக்களுக்கான வழியே தற்போது தேவை. அதனை அரசாங்கம் திட்டமிட வேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

## ஏற்றுமதி வருமானமாக ரூ.63 பில்லியன் கிடைத்துள்ளது

இந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் விவசாய செய்கை ஏற்றுமதி ஊடாக 63 பில்லியன் ரூபாய் வருமானமாக கிடைத்துள்ளதாக ஏற்றுமதி விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் 17 பில்லியன் ரூபாய் அதிகரிப்பை காணக்கூடியதாக உள்ளதென ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர், பேராசிரியர் ஏ.பி ஹீன்கெந்த தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் 40,000 இற்கும் அதிக மெற்றிக் தொன் கறுவாப்பட்டை, மிளகு, கராம்பு, சாதிக்காய், வெற்றிலை, பாக்கு உள்ளிட்ட பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

கறுவாப்பட்டை ஏற்றுமதியூடாக 26.9 பில்லியன் ரூபாயும் மிளகு ஏற்றுமதியூடாக 13 பில்லியன் ரூபாயும் கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## கல்லாற்றில் ஒரே இரவில் 3 வீடுகளில் 31 பவுண் கொள்ளை

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்று கிராமத்தில் நேற்று முன்தினம் (27) இரவு மூன்று வீடுகளில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

முகங்களை மறைத்தவாறு வீடுகளுக்குள் புகுந்து வீடுகளில் இருந்தவர்களை கத்திமுனையில் மிரட்டி அச்சுறுத்திய 6 பேர் கொண்ட கும்பல், அவர்களிடம் இருந்த தங்க ஆபரணங்களை அபகரித்துச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் கல்லாற்று கிராமத்தில் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது. கத்தி உள்ளிட்ட கூரிய ஆயுதங்களுடன் வீடு ஒன்றிற்குள் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்து 19 பவுண் தங்க ஆபரணங்களை கொள்ளையடித்துள்ளனர்.

மற்றுமோர் இடத்தில் உள்ள வீட்டிற்குள் புகுந்த கொள்ளையர்கள் 7 பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்துள்ளனர். இன்னுமொரு வீட்டில், 5 பவுண் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

தங்களுடைய பெறுமதியான பொருள்களை இழந்தவர்கள் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். கொள்ளை அடிக்கப்பட்ட சகல வீடுகளிலும் அறுவர் கொண்ட கும்பலே கைவரிசையை காட்டியுள்ளது என்றும் அந்தந்த வீடுகளைச் சேர்ந்தோர் தெரிவித்துள்ளனர்.

ஊரடங்குச் சட்டத்தைப் பயன்படுத்தி

## நாட்டின் சொத்துகளை விற்கிறார்கள்



நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்குவந்த ராஜபக்ஷர்கள் தேசிய பாதுகாப்பு, மின்சாரம், தேசிய வளங்களை அமெரிக்காவின் நிறுவனத்துக்கு கையளித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நாட்டை கட்டியெழுப்புவதாக கூறி, நாட்டின் அரசமைப்பை மாற்ற அமெரிக்க பிரஜையை பாராளுமன்றத்துக்கு அழைத்து வந்தார்கள். ஆனால் அந்த அமெரிக்க பிரஜை எமது நாட்டு வளங்களை அவரது நாட்டுக்குக் கொண்டு செல்கிறார் என்றார்.

அரசாங்கம் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தைப் பயன்படுத்தி தேசிய சொத்துகளையும் பெறுமதியான வளங்களையும் விற்பனை செய்வதற்கான ஒப்பந்தங்களை செய்கிறது.

இறக்குமதிகளை தடை செய்து நாட்டுக்குள் டொலர் வருவதையும் அரசாங்கம் தடுத்துள்ளது. யுகதனவியை அமெரிக்க நிறுவனத்துக்கு இரவு 12 மணிக்கு வழங்கியுள்ளனர். இந்த ஒப்பந்தத்தில் என்ன உள்ளது என்று எவருக்கும் தெரியாது என்றார்.

எந்தவொரு நாடு அந்நாட்டின் மின்னுற்பத்திகளை வெளிநாடுகளுக்கு வழங்குவதில்லை. ஆனால் நாட்டின் பிரதான மின்னுற்பத்தி நிலையத்தில் 40 சதவீதத்தை அமெரிக்காவுக்கு வழங்கியுள்ளனர். இது தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் எனவும் அவர் கூறினார்.

தேசிய பாதுகாப்பு என்பது துப்பாக்கியோடு மாத்திரம் தொடர்புடைய விடயமல்ல. அது நீர், மின்சாரம் உள்ளிட்ட மக்களின் வாழ்க்கையோடு தொடர்புடைய அனைத்து விடயங்களிலும் தங்கியுள்ளது எனவும் அவர் கூறினார்.

## அரசாங்கத்தை ஒப்படைத்துவிட்டு வீட்டுக்கு செல்லுங்கள்

கே.சுந்தரலிங்கம், எம்.கிருஸ்ணா



மக்களுக்கு நன்மை செய்ய முடியாத ஆட்சியாளர்கள், அரசாங்கத்தை ஒப்படைத்துவிட்டு வீட்டுக்கு செல்ல வேண்டும் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உதய குமார் தெரிவித்துள்ளார்.

தனது பிறந்த தினத்தை முன்னிட்டு சொந்த நிதியில் தலவாக்கலை லோகி தோட்டத்தில் கூம்மூட் பிரிவுக்கு செல்லும் பிரதான வீதியில் நிர்மாணிக்கப்படவுள்ள பாலத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் மிக முக்கிய துறைகளான விவசாயம், தேயிலை உள்ளிட்ட துறைகள் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு உரம் இன்றி இன்று அவர்கள் பல்வேறு பிரிச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள்,

இரசாயண உரம் வரவழைத்தால் மக்களுக்கு சிறுநீரக நோய் ஏற்படுவதாக கூறி, அரசாங்கம் இரசாயன உரத்தை நிறுத்திவிட்டு சீனாவிலிருந்து பற்றீரியாக்களை இறக்குமதி செய்துள்ளது. இது விவசாயத்துறைக்கு மாத்திரமின்றி மனித குளத்துக்கே அழிவை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தார்.


அரசாங்கத்தின் செயற்பாடுகளால் பெருந்தோட்டத்துறை படிப்படியாக அழிந்து கொண்டு வருகிறது. ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்படுமென வர்த்தமானியில் அரசாங்கம் அறிவித்தது. ஆனால் தொழிலாளர்களின் வேலை நாட்கள் குறைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

படகுகள் கவிழ்ந்ததில்

## மீனவர்கள் இருவர் மாயம்

### தேடும் பணிகள் தீவிரம்

எம்.இஸட்.ஷாஜஹான்



கடலுக்கு மீன்பிடிப்பதற்காக நள்ளிரவில் சென்ற ஐந்து படகுகள் கவிழ்ந்ததால், காணாமல்போயுள்ள இரு மீனவர்களை தேடி, மீனவர்கள் கடலுக்குச் சென்றுள்ளனர் என நீர்கொழும்பு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு அருகில் உள்ள களப்பு பகுதியில் நேற்று (28) பலத்த மழையுடன் வீசிய கடும் காற்று காரணமாக, களப்பு பகுதியில் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு படகுகள் மீது பாரிய மரம் ஒன்றும், மின்சார கம்பம் ஒன்றும் விழுந்துள்ளது.

இதன் காரணமாக படகுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதுடன் படகு இயந்திரத்துக்கும் சிறிதளவு சேதம் ஏற்பட்டுள்ளது.



கொள்கலன்களை விடுவிக்க

## ஒரு கோடியே 50 இலட்சம் டொலர் தேவை


ஐக்கிய அமெரிக்க டொலர் தட்டுப்பாடு காரணமாக கொழும்பு துறைமுகத்தில் தேங்கியிருக்கும் அத்தியாவசியப் பொருள்கள் கொண்ட கொள்கலன்களை, துறைமுகத்திலிருந்து விடுப்பதற்காக ஒருகோடியே 50 இலட்சம் அமெரிக்க டொலர் தேவைப்படுவதாக உணவுப் பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொள்கலன்களை விடுவித்துக்கொள்ள முடியாத நிலையில் உள்ள இறக்குமதியாளர்களுக்கு தேவையான டொலர் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்பட்டு, வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உணவு இறக்குமதியாளர்களின் சங்கம் சார்பில் கொள்கலன்களை விடுப்பதற்கு தேவையான நிதி தொடர்பில் வங்கிகளுடன் கலந்துரையாடப்படுவதாகவும் இறக்குமதியாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.




இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றிய உயர்மட்ட தூதுக்குழுவினர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமை கட்சியின் 'தாருஸ்ஸலாம்' தலைமையகத்தில் செவ்வாய்கிழமை (28) சந்தித்து கலந்துரையாடினர். இதில் கட்சியின் செயலாளர், ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரும் பங்குபற்றினார்.




## யாசகர்களுக்கு தடுப்பூசி

தலவாக்கலை நகரிலுள்ள யாசகர்களுக்கு கொவிட்– 19 தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என கொட்டகலை பொது சுகாதார பரிசோதகர் சௌந்தர் ராகவன் தெரிவித்தார்.

நடமாடும் சேவையின் ஊடாக 15 யாசகர்களுக்கு ஏற்றப்பட்டுள்ளது. அத்துடன், ஏனைய நகரங்களில் இருக்கும் யாசகர்களுக்கும் தடுப்பூசியை ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

இதுவரையில் தடுப்பூசி ஏற்றாதவர்களை அடையாளம் கண்டு அவர்களது வீடுகளுக்கே சென்று தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையும் கொட்டகலை பொது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் ஊடாக நடமாடும் சேவையின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது.

(படங்கள்: எம்.கிருஸ்ணா)







### விலை உயர்வை கட்டுப்படுத்துவதில்

# அலட்சியம் ஏன்?

■ வ.திவாகரன்

அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதில், நுகர்வோர் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் ஏன் பாராமுகமாக உள்ளனர் என கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இரா. துரைரெத்தினம் கேள்வியெழுப்பினார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல பகுதிகளிலும் நுகர்வோர் விலைக் கட்டுப்பாட்டை மீறிய முறையில் பொருள்களின் விலை அதிகரிப்பு நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.



இந்த விலை அதிகரிப்பின் காரணமாக, பொருளாதார கஷ்டத்தின் மத்தியில் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

நாளாந்த தேவைக்குரிய அரிசி, பால்மா, பருப்பு, சீனி, மீன், சீமெந்து, உரம், கோதுமை மா, டின் மீன், மரக்கறி என அனைத்தும் அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்டும் காணாதது போல் இருப்பது ஆரோக்கியமானதல்ல.

எனவே, மக்களது நிலை உணர்ந்து அரச நிர்வாகத்துக்குக் கட்டுப்பட்ட அமைச்சுகளும் திணைக்களங்களும் குறிப்பாக, விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் அரச பிரிவு இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கொரோனா மரணத்தில் வீழ்ச்சி

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்



கிழக்கு மாகாணத்தில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் குறைவடைந்து வருவதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்.

மாகாணத்தில் கடந்த ஒரு வாரத்துக்குள் மிகக் குறைந்த கொவிட் தொற்றாளர்களாக 595 பேர் இனங்காணப்பட்டுள்ளதாகவும் 21 மரணங்கள் சம்பவித்துள்ளதாகவும் கிழக்கு மாகாணத்தில் இதுவரை 1,618,699 கொவிட் 19 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.

20 தொடக்கம் 29 வயதுக்கு உட்டவர்களுக்கு 284,990 பேருக்கும், 30 தொடக்கம் 59 வயதுக்குட்டவர்களுக்கு 629,933 பேருக்கும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 138,417 பேருக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### ரிதிதென்ன பஸ் டிப்போவை

## மூடுவதற்கு சதித்திட்டம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்




மட்டக்களப்பு மாவட்டத்தின் ரிதிதென்னயில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் டிப்போவை மூடுவதற்கு சதித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் உறுப்பினர் ஏ.ஜி அஸீஸுல் ரஹீம் தெரிவித்தார்.



இந்த பஸ் டிப்போவில் இருந்து கண்டி, கட்டுநாயக்க, கொழும்பு உள்ளடங்கலாக செவனப்பிட்டி, கட்டுவன்வில, ரிதிதென்ன, வடமுனை ஓமனியாமடு, ஜெயந்தியாய, கடவத்த, மடு, புணானை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான பாடசாலை சேவையையும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

சுமார் 15 வருடங்களாக மிகவும் சிறப்பான முறையில் சேவைகளை வழங்கி வரும் இந்த பஸ் டிப்போவை, பிழையான தகவல்களின் அடிப்படையில் முழுமையாக மூடுவதற்கு சதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று பிரதேச சபை உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

எனவே, இவ்விடயம் தொடர்பில் பிரதேச அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், சிவில் சமூக அமைப்புகள் கவனம் செலுத்துமாறும் பிரதேச சபை உறுப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தவும்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

கிழக்கு மாகாணத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 2021ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றதை, தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீக்கப்பட்டு பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் கிழக்கு மாகாண செயலாளர் க.ஜெயதீபன் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று (28) அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், கிழக்கு மாகாண பாடசாலைகளில் நீண்ட காலமாக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படாமையால்,



தமது சொந்த இடங்களுக்கு செல்ல இயலாது அதிக மன உளைச்சலுக்கும் பொருளாதார ரீதியாக பல நெருக்கடிகளுக்கும் முகம்கொடுத்து வருகின்றனர்.

ஆசிரியர்களின் நலனை கருத்தில்கொண்டு, இந்த இடர் காலத்திலும் அனைத்து தொழிற்சங்கங்களும் தமது தொழிற்சங்க பிரதிநிதிகளூடாக இடமாற்ற கொள்கைகளுக்கு அமைவாக 2020 ஆண்டுக்கான கிழக்கு மாகாண இடமாற்ற பெயர் பட்டியலை வெளியிடுவதற்கு பல முயற்சிகளை முன்னெடுத்த போதும் கொரோனா தொற்றுக் காரணமாக 2020ஆம் ஆண்டில் வருடாந்த இடமாற்றம் நடைமுறைப்ப டுத்தப்படவில்லை.

இந்நிலையில், 2021ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்தை நடைமுறைப் படுத்துவதற்காக ஆசிரியர் சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கும் ஆசிரியர் இடமாற்ற சபையின் அங்கிகாரத்துடன் இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான கடிதங்கள் தயாரிக்கப்பட்டு, தபாலில் ஆசிரியர்களுக்கு அனுப்பப்படுவதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த போதும் குறித்த இடமாற்றம் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

### வீடுகள் சேதம்

## நிவாரணம் வழங்கல்

■ நூருல் ஹுதா உமர்

கடந்த ஜூன், ஜூலை மாதங்களில் கடும் காற்றுக் காரணமாக வீடு சேதமடைந்த 10 பயனாளிகளுக்கான தலா ரூபாய் 10,000 முதற்கட்ட காசோலை, காரைதீவு பிரதேச செயலகத்தில் வைத்து பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் தலைமையில் நேற்று (28) வழங்கப்பட்டது.

அனர்த்த நிவாரண சேவை அமைச்சால் இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், கணக்காளர் என். ஜய சர்மிகா, அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான காசோலைகளை வழங்கினர்.



### மாட்டிறைச்சியின்

## விலையை ஏற்ற முடியாது

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மாட்டிறைச்சியை கிலோகிராம் ஒன்றுக்கு 100 ரூபாயால் அதிகரித்து விற்க மாட்டிறைச்சிக் கடைக்காரர்கள் அனுமதி கோரியிருக்கின்றார்கள் என்றும் எனினும், மக்களின் சமகால பொருளாதாரக் கஷ்டங்களைக் கருத்திற்கொண்டு விலையை மேலும் அதிகரிக்க அனுமதிக்க முடியாதென ஏறாவூர் நகர சபைத் தலைவர் எம்.எஸ். நழிம் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர சபையின் 42ஆவது மாதாந்த சபை அமர்வு, நகர சபையின் சபா மண்டபத்தில் நேற்று (28) நடைபெற்றது.

நாளாந்தம் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால், வாழ முடியாது மக்கள் தடுமாறிக் கொண்டிருக்கின்ற அதேவேளை இந்த நெருக்கடியான சூழ்நிலையைப் பயன்படுத்தி வியாபாரிகளும் கொள்ளை இலாபம் அடித்துக் கொண்டிருப்பதாக அவர் சாடினார்.



இவ்வாறு நகர சபை நிர்வாக கட்டுப்பாட்டு விலையை மீறி கொள்ளை இலாபம் அடிக்கும் வர்த்தகர்களை அவதானித்து தக்க நடவடிக்கை எடுக்க மக்களின் ஒத்துழைப்பை நாடியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### இன்னும் காத்திருந்தால் அதிகாரத்தை

# இழக்க நேரிடும்

■ க. அகரன்

பாதிக்கப்பட்ட தமிழர்களின் பேச்சை, ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்கள் கேட்க வேண்டுமென, தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க செயலாளர் கோபாலகிருஷ்ணன் ராஜ்குமார் தெரிவித்தார்.

மேலும், “நாம் இன்னும் 2 ஆண்டுகள் காத்திருந்தால், வடக்கு, கிழக்கில் தமிழர்கள் தங்கள் அரசியல் அதிகாரத்தை இழக்க நேரிடும்” எனவும் அவர் கூறினார்.

வவுனியாவில், 1,685ஆவது நாளாக ஒரு நாளைக்கு ஒரு நேர உணவுத்தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம், நேற்று (28) ஏற்பாடு செய்த கவனயீர்ப்பு போராட்டம் மற்றும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்த்து கருத்து தெரிவித்த அவர், ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் இங்கு இருக்கும்போது, தமிழர்களின் பேச்சைக் கேட்க வேண்டுமென்றார்.

காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகள் உட்பட அரசியல் தீர்வு மட்டுமே, தீவின் முழுப் பிரச்சினையையும் தீர்க்கும் என்று தாங்கள் ஐரோப்பிய ஒன்றியத்திடம் தொடர்ந்து சொல்ல விரும்புவதாகவும் அவர் கூறினார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதில் மட்டும் ஐரோப்பிய ஒன்றியம் கவனம் செலுத்தக்கூடாது எனத் தெரிவித்த அவர், ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை நன்கொடையாளர் இணைத் தலைவர்கள் விடுதலைப் புலிகளின் அழிவுக்கு ஒரு பகுதியாக இருந்ததை தாங்கள் அறிவதாகவும் இது இலங்கையில் சிங்களவர்களுக்கான ஓர் உதவி எனவும் கூறினார்.

போரின் போது, இலங்கை நன்கொடையாளர் இணைத் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்ற இலங்கை தவறிவிட்டது எனத் தெரிவித்த அவர், ஐரோப்பிய ஒன்றியம் என்பது இலங்கை நன்கொடையாளர் இணைத் தலைவர்களின் ஒரு பகுதியாகும் எனவும் கூறினார்.



சிங்கள இராணுவம், பொலிஸார், சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து ஆக்கிரமிப்பு மற்றும் ஒடுக்குமுறையில் இருந்து தமிழர்களைப் பாதுகாக்க ஓர் அரசியல் தீர்வு தேவை.

பொழுது சாயுதே, நாம் இன்னும் 2 ஆண்டுகள் காத்திருந்தால், வடக்கு, கிழக்கில் தமிழர்கள் தங்கள் அரசியல் அதிகாரத்தை இழக்க நேரிடும். வடக்கு, கிழக்கில் சிங்களவர்களை குடியேற்றி இலங்கை அரசின் வேகம் கூடிக்கொண்டே போகிறது.


இலங்கை நன்கொடையாளர் இணைத் தலைவர்களுக்கு இலங்கை அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான தார்மீகப் பொறுப்பை ஐரோப்பிய ஒன்றியம் கொண்டுள்ளது எனவும், அவர் தெரிவித்தார்.

தமிழ் அரசியல்வாதிகளை நாங்கள் நம்பவில்லை எனத் தெரிவித்த அவர், அவர்கள் குரல் எழுப்பப் பயப்படுவதாகத் தெரிகிறது; மேலும், இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்படும் சலுகைகளையும் அவர்கள் அனுபவிக்கிறார்கள் எனவும் கூறினார்.

### முக்கிய நீர் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு

## யாழுக்கு பிரதமர் வருகிறார்

■ எஸ். தில்லைநாதன்



யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பளை ஆகிய பகுதிகளில், 60,000 குடும்பங்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கும் இரண்டு முக்கிய நீர் திட்டங்களை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஒக்டோபர் 6ஆம் திகதி, யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

ஆரம்பிக்கப்படும் திட்டங்கள், SWRO உப்பு நீக்கும் ஆலைபிரிவு, இது தாழையடியில் கட்டப்படும் மற்றும் இது நயினாதீவில் முழுமையாக நிறைவு செய்யப்பட்ட நீர் வழங்கல் திட்டம் ஆகும். இந்தத் திட்டம் இப்போது 5,000 பயனாளிகளுக்கு பாதுகாப்பான நீரை வழங்கும்.

மேலும், யாழ்ப்பாண நகர நீர் விநியோகத் திட்டமும் விரைவில் தொடங்கப்படும். இதில் 1 இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கிய JKWSSP இன் ( Jaffna Kilinochchi Water Supply and Sanitation Project) கீழ் 284 கிலோமீற்றர் நீளமுள்ள குழாய்களை அமைப்பதில் அடங்கும்.

யாழ்ப்பாண நகர நீர் விநியோகம் மற்றும் தாழையடி SWRO SWRO உப்பு நீக்கும் ஆலைபிரிவு, 2023க்குள் முடிக்கப்பட்டு 3 இலட்சம் பயனாளிகளுக்கு சுத்தமான நீர் வழங்கப்படும்.

## அதன் வரியை அதிகரிக்கவும்

### பிரதமருக்கு செல்வம் கடிதம்

■ க. அகரன்

அத்தியாவசியப் பொருட்களை விடுத்து புகைப்பொருள்களுக்கான வரியை அதிகரிப்பு செய்யுங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பிரதமர் மற்றும் நிதி அமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

ஏழைய மக்கள் நெருக்கடிக்கு முகங்கொடுத்து வரும் நிலையில்தான், அத்தியாவசியப் பொருட்களின் மீதான வரியை அரசாங்கம் அதிகரித்து வருகின்றது.

ஒரு சிகரெட்டின் விலையினை ரூபாய் 20 தினால் உயர்த்தியிருந்தால் சுமார் 100 பில்லியன் ரூபாவை இழக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

புகைத்தல், சமூகத்தில் ஒரு பாரிய சமூக சீர்குலைவை வழிவகுத்துக் கொண்டிருக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

எனவே, இதனை தடுக்க வேண்டுமென்றால் சிகரெட் மீதான வரியை அரசாங்கம் அதிகரிக்கவேண்டும் என்றார்.

அவ்வாறான வரி முறைமையால் தனது வருமானத்தை அதிகரிக்கச்செய்வதோடு பாவனையிலும் சடுதியான வீழ்ச்சியினை ஏற்படுத்த முடியும்.

இன்றைய காலப்பகுதியில் சிகரெட் பாவனையை குறைப்பது கொவிட் -19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கும் பாரிய உதவியாக அமையும் என்பது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத்திட்டத்தில் நாட்டிற்கும் நாட்டுமக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் சிகரெட் மீது முறையாக வரி அறவிடப்படும் கொள்ளையொன்றினை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவீர்கள் என தீர்க்கமாக நான் நம்புகின்றேன் என்றும் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்தார்.

## விபத்தில் இளைஞன் படுகாயம்

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு - திருகோணமலை வீதி, நாயாறு பகுதியில், நேற்று முன்தினம் (27), மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில், இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

முல்லைத்தீவு - செம்மலை கிழக்கு, நாயாறு பகுதியைச் சேர்ந்த ஏ.கதீஸ்கரன் (வயது 23) என்ற இளைஞனே, இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

செம்மலையில் இருந்து நாயாறு நோக்கி குறித்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போதே, மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த பனைவடலியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது இளைஞன் தூக்கிவீசப்பட்ட நிலையில், பனை வடலிக்குள் இருந்த பிளேட் கம்பி வெட்டியதில் கழுத்து குரல் வளைப்பகுதி துண்டாக வெட்டப்பட்டப்பட்டது.

இதையடுத்து, குறித்த இளைஞன், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதான வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.



## பசுவை வெட்டி குளத்தில் வீசிய விசமிகள்

■ க. அகரன்

வவுனியா, தவசிகுளம் பகுதியில், கன்று ஈனும் நிலையில் இருந்த பசு ஒன்றை வெட்டிய விசமிகள், அதனை அருகில் உள்ள குளத்தில் எறிந்துள்ளனர்.

தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரின் நல்லின வளர்ப்பு பசு கடந்த இரு தினங்களுக்கு முன்னர் காணாமல் போயுள்ளது.

இதனையடுத்து காணாமல் போன பசுவை தேடிய போது, குறித்த பெண்ணின் வீட்டுக்கு அருகில் அமைந்துள்ள குளத்தில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டது.

குறித்த பசுவின் தலை மற்றும் உடல் பகுதிகள் கூரிய ஆயுதத்தால் அறுக்கப்பட்டிருந்தன.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நிர்வாகத்துக்கு எதிராக

# டீசைட்டில் போராட்டம்

செ.தி பெருமாள், எஸ்.கணேசன்

மஸ்கெலியா- டீசைட் தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக அத்தோட்டத்தை சேர்ந்த சுமார் 300க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், கடந்த 8 நாள்களாக பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்து வருவதுடன், நேற்று (28) தொழிற்சாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர்.

மஸ்கெலியா டீசைட் தோட்ட நிர்வாகம், தேயிலை மலைகளை காடுகளாக்கி சுத்தம் செய்ய நடவடிக்கைகளை எடுக்காது, 20 கிலோகிராமுக்கு அதிகமான தேயிலை கொழுந்தினை பறிக்குமாறு வழியுறுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.



இந்த விடயத்தில் தோட்ட நிர்வாக அதிகாரிக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் வாக்குவாதமும் முறுகல் நிலையும் தோன்றியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தோட்டத்தில் 50 ஏக்கர் வரையான தேயிலை மலைகள் காடுகளாகி மூடப்பட்டிருப்பதாகவும், ஆண் தொழிலாளர்களை ஒரு நாள் பெயருக்கு 750 கிலோகிராம் புற்களை வெட்டி கொம்பஸ்ட் செய்யும் படி வலியுறுத்துவதோடு, வேறு தோட்டங்களுக்கு பணிக்கு செல்லும்படி வலியுறுத்துவதாகவும் போராட்டகாரர்கள் தெரிவித்தனர்.

அத்தோடு, தொழிலாளர்களுக்கு முற்பண சம்பளம் கொடுப்பதில் இழுபறி நிலை ஏற்படுவதாகவும், தோட்ட நிர்வாகம் எந்தவித அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்காமல் அடிமைகளைப் போல் நடத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது என தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்த விடயத்தில் தொழிற்சங்கங்களும், மலையக அரசியல் தலைமைகளும் தீர்க்கமான முடிவினை பெற்றுத்தர வேண்டும் எனவும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

கண்டி மாவட்டத்தில்

## 16 புதிய பொலிஸ் நிலையங்கள்

நதீக தயா பண்டார

இந்த வருட இறுதிக்குள் கண்டி மாவட்டத்தில் புதிதாக 16 பொலிஸ் நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் சந்தன அலஹகோன் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்துக்கான எதிர்காலம் கொள்கைக்கு அமைய, பொலிஸை கிராமங்களுக்கு கொண்டு செல்லும் எண்ணக்கருக்கமைய இத்திட்டம் செயற்படுத்தப்பட உள்ளதென்றார்.

இதற்கமைய, கம்பளை பொலிஸ் பிரிவில், புஸல்லாவை- பெரட்டாசி, தெல்தொட்ட, ஏத்கால, நாவலப்பிட்டி- மகாவலி வீட்டுத் திட்டம், தெல்தெனிய பொலிஸ் பிரிவின் அம்பகோட்டே, அம்பால, லேவெல்ல ஆகிய இடங்களில் புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது என்றார்.

## மத்தியில் குறைவு

மொஹொமட் ஆஸிக்

மத்திய மாகாணத்தில் பதிவாகும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருவதாக மத்திய மாகாண சுகாதார திணைக்களம்தெரிவிக்கின்றது.

இதற்கமைய, கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் கடந்த 24 மணித்தியாலத்தில் 78 தொற்றாளர்களே பதிவாகியுள்ளனர் என்றும் மாகாண சுகாதார திணைக்களம் தெரிவிக்கின்றது.

இதன் அடிப்படிப்படையில் கண்டி மாவட்டத்தில் ஒரு நாளில் 34 தொற்றாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 27 தொற்றாளர்களும், நுவரெலியா மாவட்டத்தில் 17 தொற்றாளர்களும் புதிதாகப் பதிவாகியுள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் கண்டி மாவட்டத்தில் இதுவரை 33,140 தொற்றாளர்களும், நுவரெலியா மாவட்டத்தில் 13,140 தொற்றாளர்களும் மாத்தளை மாவட்டத்தில் 17,862 தொற்றாளர்களுமாக மொத்தமாக 64,122 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அத்துடன் நேற்று (28) வரை கண்டி மாவட்டத்தில் 939 மரணங்கள், மாத்தளை மாவட்டத்தில் 465 மரணங்கள், நுவரெலியா மாவட்டத்தில் 483 மரணங்களுமாக மொத்தமாக 1,887 மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

கொத்மலை தமிழ்கல்வி வலயம்

## வரலாற்று வெற்றியை பதிவு செய்துள்ளது

நிலமேகம் பிரசாந்த்

வெளிவந்த கல்வி பொதுத்தராதர சாதாரண தர பெறுபேற்றின் அடிப்படையில், கொத்மலை தமிழ்கல்வி பிரிவு மத்திய மாகாணத்தில் நான்காவது இடத்தையும் நுவரெலியா மாவட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளதாக கொத்மலை வலய தமிழ் கோட்டக்கல்வி பணிப்பாளர் மா.சு இங்கர்ஷால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்ப்பில் அவர் தெரிவிக்கையில்,

தற்போதைய சூழ்நிலையில் இவ்வாறானதொரு பெறுபேறு கிடைத்தமை மிக மகிழ்ச்சியை பெற்றுக்கொடுத்துள்ளது. காரணம் தற்போது கொரோனா எனும் பெரும் தொற்று காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. மாணவர்கள் கற்க முடியாத சூழ்நிலையும் உருவாகியிருந்தது.

அது மட்டுமல்லாமல் இணைய வழி ஊடாக கற்கைகள் தொடரப்பட்டாலும் பெரும்பாலான பகுதிகளில் இணைய வசதியை ஏற்படுத்தி கொள்ள முடியாத நிலை காணப்பட்டது. இவ்வாறான பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து இன்று எமது மாணவர்கள் சாதித்துள்ளனர் என்றார்.



## பதுளை கழிவுகள் புத்தளத்துக்கு

பாலித ஆரியவன்ஸ

பதுளை மாநகர சபையால் சேகரிக்கப்படும் பொலித்தின் கழிவுகளை புத்தளம் சீமெந்து தொழிற்சாலைக்காக அனுப்ப பதுளை மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பதுளை மாநகர சபையின் கழிவுகள் பிரிவில், மீள்சுழற்சிக்கு உட்படுத்த முடியாத பொலித்தீன் வேறாக்கப்படுவதாகவும், இவ்வாறு வாராந்தம் 18 டொன் பொலித்தின் சேகரிக்கப்படுவதாகவும் மாநகர சபையின் மேயர் பிரியந்த அமரசிறி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு புத்தளத்துக்கு அனுப்பபடும் பொலித்தீன் கழிவுகள், குறித்த சீமெந்து நிறுவனத்தின் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட உள்ளதென்றும் இதனால் பதுளை நகரில் ஏற்படும் கழிவுப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்றும் மேயர் தெரிவித்துள்ளார்.





## கூரைகளைப் பிடுங்கிய காற்று

தனராஜா, நிலமேகம் பிரசாந்த்

மலையகத்தில் பெய்து வரும் கடும் காற்றுடனான மழையால் குடியிருப்புகளின் கூரைகள் பல காற்றில் அள்ளுண்டு சென்றுள்ளன.

இதற்கமைய, பசறை- கனவரல்ல கீழ் பிரிவில் நேற்று முன்தினம் (27) வீசிய கடும் காற்று காரணமாக, வீடொன்றின் கூரை முற்றாக சேதமடைந்துள்ளது.

இதேபோல், பூண்டுலோயா -ஹெரோ கீழ்ப்பிரிவு தோட்டத்தில் மரமொன்று வேரோடு முறிந்து சாய்ந்ததில், அருகிலிருந்த வீடொன்று முற்றாக சேதத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று (28) காலை 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதுடன் வீட்டிலிருந்த பொருட்களும் சேதமாகியுள்ளன.

லிந்துலையில்


## நாயை வேட்டையாடிய சிறுத்தை

பாலேந்திரன்

லிந்துலை- டில்கூல்ட்ரி தோட்டத்தில் சிறுத்தையொன்று, நாயை, இரண்டு துண்டுகளாக கடித்து துண்டாக்கிய சம்பவம் நேற்று முன்தினம் (27) இடம்பெற்றுள்ளது.

வளர்ப்பு நாய் ஒன்றையே, சிறுத்தை இவ்வாறு வேட்டையாடியுள்ளது.

இரவில், தோட்ட குடியிருப்பு பகுதிகளுக்கு வரும் சிறுத்தைகள், வீட்டில் வளர்க்கும் செல்ல பிராணிகளை கடித்துக் கொல்லும் நிலைக்கு வந்துள்ளதாகவும், இரவில் வீடுகளிலிருந்து வெளியில் வருபவர்களையும் சிறுத்தை



தாக்க முயற்சிப்பதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்

எனவே, தோட்ட பகுதிகளில் சிறுத்தை நடமாட்டத்தைக் குறைக்கும் வகையில், சிறுத்தைகளை பிடித்து செல்லும் நடவடிக்கைகளை வன ஜீவராசி திணைக்கள அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.



ஹட்டன் கல்வி வலயத்தின் 22 பாடசாலை மாணவர்களுக்கு

## 1,250 டெப்கள் வழங்கி வைக்கப்பட்டன

கே.சுந்தரலிங்கம்

ஹட்டன் கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 22 தமிழ், சிங்கள பாடசாலை மாணவர்களுக்கு, 1,250 டெப்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக ஹட்டன் வலயக் கல்விப்பணிப்பாளர் பி.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

ஹட்டன் கல்வி வலயத்தில் உள்ள அதிகஷ்ட பிரதேச மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களின் கல்வியினை நிகழ்நிலை மூலம் பெற்றுக்கொடுத்து ஊக்குவிப்பதற்காக, அரசாங்கம் குறித்த டெப்களை வழங்க முன்வந்ததாக அவர் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வு ஹட்டன் வலயக்கல்விப்பணிப்பானர் பி.ஸ்ரீதரன் தலைமையில், ஆசிரியர் வள நிலையத்தில் நேற்று (28) திகதி நடைபெற்றது.

இவ்வாறு டெப்கள் வழங்கி வைக்கப்பட்ட பாடசாலைகளில், வைபை தொழில்நுட்பம் மற்றும் பைபர் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி இணைய வழி கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான வேலைத்திட்டத்தினை ஸ்ரீ லங்கா டெலிகொம் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் இணைய வழி கல்வியினை மேம்படுத்த ஒரு சில ஆசிரியர்களுக்கும் இதன் போது டெப்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

சிலைகளில் நகைகளைத் திருடிய

## முடி திருத்துனருக்கு விளக்கமறியல்

அஜத்லால் சாந்த உதய

அண்மையில் இரத்தினபுரி- மஹவலவத்த சிவன் கோவிலிலுள்ள காளி சிலைக்கு அணிவிக்கப்பட்டிருந்த தங்க நகைகளை திருடிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபரை அடுத்த மாதம் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, இரத்தினபுரி மேலதிக நீதவான் துலான் விஜேவர்தன உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாற கைதுசெய்யப்பட்டவர் முடி திருத்துனராக தொழில் செய்பவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் கொரோனா தொற்றால் தொழில் வாய்ப்பை இழந்துள்ளதாகவும், இதனால் வறுமை காரணமான 7க்கும் அதிகமான கோவில் சிலைகளிலிருந்து நகைகளை திருடியுள்ளதாகவும் வாக்குமூலம் அளித்துள்ளார்.





கிராம அபிவிருத்தி கூட்டத்தில்

## கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு அழைப்பில்லை

### பிரதேச செயலாளரிடம் முறைப்பாடு

டி.சந்ரு

நானுஓயா கிரிமெட்டி கிராம சேவகர் பிரிவில் கிராம அபிவிருத்தி தொடர்பாக நடத்தப்பட்ட அபிருத்திக் கூட்டத்துக்கு, கிராமஅபிவிருத்தி சங்கங்களுக்கு அழைப்பு இல்லையென, நுவரெலியா பிரதேச செயலாளருக்கு இப்பிரதேசத்திலுள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கள் முறைப்பாடு செய்துள்ளன.

நானுஓயா கிரிமெட்டி 476 A கிராம சேவகர் பிரிவில், 'வெடசமக யலி கமட' என்ற அரசாங்கத்தின் வேலைத் திட்டத்துக்கு 30 இலட்சம் ரூபாய் நிதி அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் சுய தொழில் செய்பவர்களுக்கு கோழி வளர்ப்பு , காளான் வளர்ப்பு, கிராம வீதி அபிவிருத்தி, குடிநீர் உட்பட பாடசாலை கட்டிட அபிருத்திகளுக்கு அரசாங்கத்தால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் (27) டெஸ்போர்ட் தமிழ் வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்திற்கு, கிராம சேவகருக்கும் அபிவிருத்தி உத்தியோகஸ்தருக்கும் தேவையானவர்களை மாத்திரம் அழைத்து, அபிவிருத்தி கூட்டம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மகிழ்ச்சியில் சிறகடித்துப் பறக்க ‘இன்பச் சுற்றுலா’ செல்லுங்கள்

உலகம் முழுவதும் சுற்றிவரவேண்டும் என்றோர் ஆசை, யாரிடம்தான் இருக்காது. ஆனால், வீட்டைவிட்டே வெளியேறமுடியாத நிலைமையொன்று ஏற்பட்டு, ஒவ்வொருவரிடத்திலும் அழுத்தமான உணர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. அதிலிருந்து கொஞ்சம், கொஞ்சமாகப் பலரும் தங்களைத் தாங்களாகவே விடுவித்துக்கொண்டனர்.

கொரோனாவுக்குப் பின்னர், ஒவ்வொரு நாடும் பொருளாதார ரீதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அபிவிருந்தி அடைந்துவரும் நாடுகளின் நிலைமை மோசமாகிவிட்டது. அந்நியசெலாவணியை ஈட்டித்தரும் சுற்றுலாத்துறை, முற்றுமுழுதாக ஸ்தம்பிதமடைந்துவிட்டது. சில நாடுகளில் வழமைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றன.

நமது நாட்டை பொறுத்தவரையில், சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு பல்வேறான செயற்றிட்டங்கள், காலவோட்டத்துக்கு ஏற்றவகையில் முன்னெடுக்கப்படுகின்றன. கொரோனாக் காலத்தில், முடங்கியே இருக்கவேண்டும் என்பதால், தத்தமது வீடுகளுக்குள், வீட்டுவளவுக்குள்ளே சுற்றிவரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

உலக சுற்றுலா தினமாக செப்டெம்பர் 27ஆம் திகதியை ஐ.நா சபை, 1970 ஆம் ஆண்டு அங்கிகரித்து, ஒரு தசாப்தத்துக்குப் பின்னர் 1980 முதல், உலக சுற்றுலா தினமாக கொண்டாடப்படுகிறது. போக்குவரத்து, தங்குமிடம், வணிகம், பொழுதுபோக்கு உள்ளிட்ட பல துறைகளை உள்ளடக்கியதே சுற்றுலாத்துறை. இதனூடாக நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்லாயிரக்கணக்கானோர் வேலைவாய்ப்புகளைப் பெறுகின்றனர்.

கொரோனாவால், சுற்றுலாவுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வோர் புதிய அனுபவங்களையும் சிந்தனைகளையும் பெறுகின்றனர். இங்கிருந்து செல்வோர், அதேபோன்ற அனுபவங்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இல்லாதவர்கள் எனச் சொல்லப்படுபவர்கள், கோவில்கள், சுற்றுலாத்தளங்கள், கடற்கரையோரங்கள், வனாந்தரங்கள், தலங்கள் என உள்ளூரிலேயே சுற்றுலாச் செய்து, புதுப்புது அனுபவங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். சுற்றுலா செல்வது, அழுத்தமான உணர்வுகளிலிருந்து விடுப்பதற்கான சிறந்த முறையாகும்.

நமது நாடும் திறக்கப்பட்டுவிட்டால், சுற்றுலாத்துறையில் இருப்போர், மனமகிழ்ச்சி அடைவர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் “இலங்கையின் அழகை ரசிக்கும் ஆத்மார்த்த அனுபவத்தைப் பருக வாருங்கள்” என, உலக சுற்றுலாப் பயணிகளுக்கு அழைப்புவிடுத்துள்ளார்.

நாட்டை முழுமையாகத் திறப்பதா, கட்டுப்பாடுகளுடன் திறப்பதா என்பது தொடர்பில், உத்தியோகபூர்வமான அறிவிப்புகள் வெளியாகவில்லை. எனினும், பொருளாதாரத்தைக் கவனத்தில் கொண்டு, திறக்கப்படவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் அரசாங்கம் சிக்கிக்கொண்டுள்ளது. மக்களும் அதே சிக்கலுக்குள்ளேயே சிக்கியுள்ளனர்.

இந்தச் சிக்கல்கள் அவிழ்க்கப்பட வேண்டும். அதற்கு, ஒவ்வொருவரும் மிகவிழிப்பாகச் செயற்பட வேண்டும். வீடுகளுக்குள்ளே முடங்கிக்கிடப்போர், வெளியே வந்து மன அழுத்தமான உணர்வுகளிலிருந்து விடுபட்டு, சிறகடித்துப் பறக்கவே வேண்டும்.

மகிழ்ச்சியில் சிறகடித்துப் பறக்க வேண்டுமாயின், ‘இன்பச் சுற்றுலா’ செல்லுங்கள்; வாழ்க்கையை இரசித்து வாழுங்கள்; அதிலிருந்து புத்துணர்ச்சி பெறுங்கள். ஆனாலும், சுகாதார வழிகாட்டல்களை இறுக்கமாகப் பின்பற்றுவதிலிருந்து, சற்றும் விலகிவிடாதீர்கள்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

நான், உறங்க விரும்புகின்றேன். நெஞ்சத்தின் எண்ணங்களை நிறுத்திவிட்டு, ஓயாமல் உட்புகும் மாசுகளைத் துடைத்தெறிந்து, புதுநிலைக்குக் கொண்டுவந்தால்த்தான் நிம்மதி.

நிர்மலமான நிலை எளிதல்ல! ஆனால், அதை அடைந்தேயாக வேண்டும். சொந்தப் பிரச்சினைகள் எதுவும் எனக்குக் கிடையாது. ஆயினும், உலகப் போக்கை உணராது எப்படி இருப்பது?

சுற்றியிருக்கும் மக்களும் ஜீவராசிகளும் படும் அவஸ்தைகளைக் கண்டும் கேட்டும் மௌனமாக இருக்க முடியுமா? ஏகாந்த நிலையில், சரீரம் வானில் பறந்து செல்வது போலிருக்கும். ஆயினும், சின்னத் துயர் மோதினால், மனம் மீண்டும் உலகுக்குள் பிரவேசித்துவிடுகின்றது.

நிர்மலமான நிகழ்வைச் சிருஷ்டிக்க, அகமும் புறமும் மௌனமாக நிர்ச் சிந்தனைக்குள் ஆட்பட்டேயாக வேண்டும். பாரங்களை உடைத்தெறிந்து, ஆன்மாவுக்கும் தேகத்துக்கும் நிம்மதியை வழங்க வேண்டும்.

மனஒடுக்கம், தியானம், அகத்தின் மீதான நம்பிக்கை, சுடராக எழவேண்டும். எம்மால் எதுவும் முடியும்; தெளிவான ஞானத்தைத் தேடுக.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்



எம்.எஸ்.எம். ஐயூப்

### அமெரிக்காவில் ஏற்பட்ட

# மாற்றம் தொடரட்டும்

இரண்டு வார காலமாக, நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டம், நேற்று முன்தினம் (27) முடிவடைந்தது. அதில் கலந்து கொள்ளச் சென்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அக்கூட்டத்துக்கு முன்னர் ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸ்ஸையும் சந்தித்து உரையாடினார்.

பொதுச்சபைக் கூட்டத்தில் நிகழ்த்தப்பட்ட ஜனாதிபதியின் உரையைப் பற்றி, இலங்கையில் எவரும் கருத்துத் தெரிவித்ததாகத் தெரியவில்லை. அவர், ஐ.நா செயலாளர் நாயகத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையிலும், இனப்பிரச்சினை விடயத்தில் அவர் தெரிவித்த கருத்துகள் மட்டுமே, பலரது கவனத்தை ஈர்த்திருந்தன. அவர், இனப்பிரச்சினைச் சார்த்த விடயங்களைப் பற்றித் தெரிவித்த கருத்துகளைக் கேட்டறிந்த பலர், கோட்டாபய ராஜபக்ஷவா, மாறிவிட்டாரா என்று கேட்கவும் கூடும்.

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கல், காணிகளை அவற்றின் உரிமையாளர்களிடம் கையளித்தல், 2009 ஆம் ஆண்டு முதல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டட ‘பாரிய’ அபிவிருத்தி ஆகியவற்றைப் பற்றி, ஐ.நா செயலாளர் நாயகத்திடம் அவர் எடுத்துரைத்ததாக ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதியின் அமெரிக்க விஜயத்தைப் பற்றி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

காணாமற் போனவர்கள் விடயத்தில், அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் காணாமற்போனோருக்காக மரண சான்றிதழ்களை வழங்குவது போன்ற முயற்சிகளைத் துரிதப்படுத்தப் போவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட பல இளைஞர்களை, தாம் பதவிக்கு வந்ததன் பின்னர் விடுதலை செய்ததாகவும் அவ்வாறு விடுதலை செய்ய முடியாதோர் விடயத்திலான சட்ட நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் என்றும் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்ட தமிழ் இளைஞர்களுக்கு, அவர்களது நீண்ட கால தடுப்புக் காவலை கருத்தில் கொண்டும் சட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாகிய பின்னர், ஜனாதிபதி மன்னிப்பை வழங்கத் தாம் தயங்கவில்லை என்றும் ஜனாதிபதி அந்தச் சந்திப்பின் போது குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் உள்விவகாரங்கள், உள்நாட்டுப் பொறிமுறையொன்றின் மூலமே தீர்க்கப்பட வேண்டும என்த் தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காகப் புலம்பெயர்ந்துள்ள தமிழர்களை அழைக்க இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதல், வடக்கு, கிழக்கில் மக்களிடம் அபகரிக்கப்பட்ட காணிகளை மீண்டும் உரிமையாளர்களுக்கு வழங்குதல், வடக்கையும் கிழக்கையும் அபிவிருத்தி செய்தல், காணாமற்போனவர்கள் விடயத்தில் துரிதமாக நடவடிக்கை எடுத்தல், அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், அவர்களுக்கு ஜனாதிபதி மன்னிப்பை வழங்குதல், உள்நாட்டுப் பொறிமுறையொன்றின் மூலம் பொறுப்புக் கூறல், புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துதல் ஆகியவை, நல்ல காரியங்கள் என்றே, ஜனாதிபதி இந்தக் கலந்துரையாடல் மூலம் கூறுகிறார்.

ஆனால், இப்பணிகள் நல்ல பணிகள் என்று அவரோ அவரது கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவோ அக்கட்சியோடு இணைந்திருக்கும் சிறிய கட்சிகளோ கருதுவதாக, நாம் இது வரை விளங்கிக் கொண்டு இருக்கவில்லை. அது எமது தவறா? இல்லை; நாம் அவ்வாறு சிந்திக்கும் வண்ணம், அவரோ அவரது கட்சியோ அக்கட்சியோடு இணைந்து இருக்கும் கட்சிகளோ செயற்படவில்லை. அவ்வனைவரும், அதற்கு மாறாகவே இதுவரை நடந்து கொண்டுள்ளனர்.

நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டவர்களை விடுதலை செய்ய, கடந்த அரசாங்கம் முற்பட்ட போது, பொதுஜன பெரமுனவினர் (அப்போது மஹிந்த அணியினர்) “அரசாங்கம் கொடிய பயங்கரவாதிகளை விடுதலை செய்யப் போகிறது” என்று கூச்சலிட்டு, இனவாதத்தைத் தூண்டி, அதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தனர். எனவே, தனித்தனி நபர்களாக, தனித்தனி வழக்குகள் மூலம் அவர்களை விடுதலை செய்ய, கடந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது.

போர்க் காலத்தில், ஆயுதப் படையினர் கைப்பற்றிய காணிகளை விடுவிக்க, கடந்த அரசாங்கம் முற்பட்ட போதும் இதேபோல் பாதுகாப்புக்குக் குந்தகமான முறையில் அரசாங்கம் காணிகளை, தமிழர்களிடம் கையளிக்கிறது என்று மஹிந்த அணியினர் கூச்சலிட்டனர்.

கடந்த அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன், அப்போதைய வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீர, புலம்பெயர்ந்தவர்களின் பல அமைப்புகள் மீதான தடையை நீக்கி, அவர்களது விழா ஒன்றை, 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், இலங்கையில் நடத்தத் தயாரானார். அப்போது மஹிந்த அணியினர், அதை எதிர்த்தனர். நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும், மஹிந்த அணியினர் மிக மோசமாக இனவாதத்தைத் தூண்டியிருந்த நிலையில், மங்கள அந்தத் திட்டத்தைக் கைவிட்டார்.

உள்நாட்டுப் பிரச்சினைகளை, உள்நாட்டுப் பொறிமுறையொன்றின் மூலம் தீர்க்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறும் போது, போர்க் கால மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறலைப் பற்றியே அவர் குறிப்பிடுகிறார். அதற்காகவே, உள்நாட்டுப் பொறிமுறையா, சர்வதேச பொறிமுறையா என்ற சர்ச்சை, இது காலவரையும் நடைபெற்று வருகிறது. அவர், அதனை நேரடியாகவே குறிப்பிடாதது ஏன் என்ற கேள்வி இங்கே எழுகிறது.

அதேவேளை, ‘பொறுப்புக் கூறல்’ என்ற உள்நாட்டுப் பிரச்சினையை, உள்நாட்டிலேயே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றே ஐ.நாவும் ஆரம்பத்தில் கூறியது. அதனால், இலங்கை அரசாங்கமே நியமித்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதை மட்டுமே, 2012ஆம் ஆண்டு மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையில் வலியுறுத்தப்பட்டு இருந்தது. இன்னமும் அதனை வலியுறுத்துகிறது. அரசாங்கம் அதற்கு இணங்காததாலேயே, 2012ஆம் ஆண்டு முதல், வருடாந்தம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பாகப் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தாம் பதவிக்கு வந்ததன் பின்னர், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் சிலரை விடுதலை செய்ததாக, குட்டரைஸிடம் ஜனாதிபதி கூறியிருக்கிறார். அதேவேளை, தண்டனைக் காலம் முடிவடையும் தருவாயில் இருந்த 16 கைதிகளை அரசாங்கம், அண்மையில் விடுதலை செய்ததாக, மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகர், தமது வாய்மூல அறிக்கையில் குறிப்பிட்டு இருந்தார். அது, குட்டரெஸூக்குத் தெரியுமோ தெரியாது. அவருக்குத் தெரியாதிருந்தாலும், ஜனாதிபதி கூறுபவற்றில் ஏதாவது முக்கியத்துவத்தை உணர்ந்தால், அதனை அவர் மனித உரிமைகள் பேரவைக்குத் தான் தெரிவிக்க வேண்டும்.

ஐ.நா செயலாளரும் ஜனாதிபதி குறிப்பிட்ட இந்தப் பிரச்சினைகளைப் பற்றி கவனம் செலுத்திய முதலாவது முறை இதுவல்ல. இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில், குட்டரெஸ், அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகராக 2006ஆம் ஆண்டு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தார். அவர், 2005 முதல் 2015 ஆம் ஆண்டு வரை அப்பதவியில் இருந்தார்.

எனவே, இந்தக் காணிப் பிரச்சினை, அகதிகள் பிரச்சினை, கைதிகளின் பிரச்சினை, காணாமற்போனோர்களின் பிரச்சினை, பயங்கரவாத் தடைச் சட்டம் போன்ற விடயங்களைப் பற்றி, இதற்கு முன்னர் அவர் கவனம் செலுத்தியிருப்பார் என்றே ஊகிக்க வேண்டும்.

மனித உரிமைகள் பேரவையில், ஏதாவது நெகிழ்வுத் தன்மையை எதிர்ப்பார்த்தே, கைதிகளை விடுதலை செய்தேன், காணிகளை விடுவித்தேன், புலம் பெயர்ந்தோருடன் பேசப் போகிறேன் என்றெல்லாம் ஜனாதிபதி கூறுகிறார் போலும். அதனை, குட்டரெஸ் உண்மை என ஏற்றுக் கொண்டாலும், அவர் அதனை, மனித உரிமைகள் பேரவைக்குத் தான் தெரிவிக்க வேண்டும். அங்குள்ளவர்களுக்கு நிலைமையை புதிதாக விளக்கத் தேவையில்லை.

புலம்பெயர்ந்த தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக ஜனாதிபதி தெரிவித்த கருத்தை, தமிழ் அரசியல்வாதிகள் நம்புவதாக இல்லை. அது அடித்தளமற்ற சந்தேகம் அல்ல.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி ஏற்றவுடனும் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தும் திட்டம் ஒன்று இருப்பதாக கூறப்பட்டது. ஆனால் அது நடைபெறவில்லை.

அதன் பின்னர், இவ்வருடம் ஜூன் மாதம் மீண்டும் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்ததை நடத்த சில ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் அது, காரணம் கூறாமலே பிற்போடப்பட்டது. அப்பேச்சுவார்த்தைகள் இன்னமும் நடைபெறவில்லை.

கூட்டமைப்பினர், இப்போது தனித் தமிழ் நாட்டை கோருவதில்லை. ஆனால், புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தமிழ் ஈழத்தையே வலியுறுத்தி வருகின்றன. அவ்வாறு இருக்க, கூட்டமைப்புடன் பேசாமல் புலம்பெயர் தமிழர்களுடன் பேசப் போவதாக ஜனாதிபதி கூறுகிறார்.

2021 மார்ச் மாதம், புலம்பெயர் தமிழ் அமைப்புகள் பலவற்றை அரசாங்கம் தடை செய்தது. இந்த நிலையிலேயே, ஜனாதிபதி அவ்வமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாகக் கூறுகிறார். நியூயோர்க்கில் கூறியவற்றை அவர் இலங்கை மக்களிடம் கூறுவாரா?

நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும்; இப்போது தாம், குட்டரெஸிடம் கூறியவற்றை, ஜனாதிபதி செய்ய முயல்வதாகத் தெரிந்தால், பழைய கதைகளை மறந்து, சகலரும் அதற்காக அவரை ஊக்கப்படுத்துவதும் அந்த முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதும் கட்டாய கடமையாகும்.

## கடிதங்கள்

### காடழிப்பு, நிலஆக்கிரமிப்பு:

# அதிகாரிகள் அசமந்தம்

அம்பாறை, திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள உமரி கிராமத்தில், கல்பாறைகள் நிறைந்துள்ள காட்டு மரங்களை வெட்டித் தீயிட்டு, காடழிப்பு நடவடிக்கையிலும் நிலஆக்கிரமிப்பிலும் சிலர் ஈடுபட்டு வருகிறார்கள்.

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள உமரி கிராமத்தில் இருக்கும் கற்பாறைகளுடனான காட்டுப்பகுதி, அரச காணிகள் ஆகும். களப்பு, வட்டிகுளம் பகுதியை அண்மித்த கிராமங்களிலுள்ள இந்தக் காடுகளின் மரங்களை வெட்டி, அவற்றைத் தீயிட்டு அழித்து, நிலங்களை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளை சிலர், சில வாரங்களாக மேற்கொண்டு வருகின்றனர்.

அதாவது, உமரி கடற்கரை பகுதியிலுள்ள சிலர், தமது சொந்தக் காணிகளை தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு விற்பனை செய்துவிட்டு, தற்போது குடிமனைகளைக் கட்டி, சேனைப்பயிர் செய்கை செய்யப் போவதாகக் கூறி, இதுவரை 10 ஏக்கர் வரையிலான காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இந்தக் கற்பாறைக் காட்டில், எவ்வாறு பயிர் செய்யமுடியும் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

குறித்த, காடழிப்பு, நிலஆக்கிரமிப்பு, சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக, சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஆகவே, இதன் பாதிப்பை உணர்ந்து, உடனடியாக இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள, அதிகாரிகள் முன்வர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

–நடராஜன் ஹரன்




### 01. பஹரேனுடன் ஒப்பந்தம்

இராஜதந்திர, விசேட மற்றும் கடமைக்கான கடவுச்சீட்டு உரித்துடைய நபர்களுக்கு வீசா அனுமதி பெற்றுக்கொள்வதிலிருந்து விடுவிப்பதற்கான இலங்கை ஜனநாயக குடியரசு மற்றும் பஹரேன் இராஜதானிக்கும் இடையில் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதி ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியிருந்தது.

### 02.இதய சத்திர சிகிக்சையை மேற்கொள்ளல்

எமது நாட்டில் 3,000 குழந்தைகள் இதயநோயுடன் ஒவ்வொரு வருடமும் பிறக்கின்றனர். அவர்களில் 1500 - 2000 பேருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டியும் உள்ளது. கூடுதலான மருத்துவமனைகளிலிருந்து இவ்வாறான பிள்ளைகளை கொழும்பு சீமாட்டி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனைக்கு அனுப்புவதுடன், ஒரு வருடத்தில் கிட்டத்தட்ட 900 சத்திரசிகிச்சைகளை மாத்திரமே மேற்கொள்வதற்கான வசதிகள் குறித்த மருத்துவமனையில் காணப்படுகின்றன.

இதய சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கான நெரிசலைக் குறைப்பதற்காக இந்தியாவின் 3,201 மாவட்ட சர்வதேச றொட்டரி கழகம் மற்றும் RID 3220 கொழும்பு மேற்கு றொட்டரி கழகத்தால் இந்தியாவின் கொச்சியில் அமைந்துள்ள அம்ரிதா மருத்துவ விஞ்ஞான நிறுவனத்தில் பிள்ளைகளுக்கான சிக்கலான இதய சத்திரசிகிச்சையை மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்காக இரண்டு வருடங்களுக்கான கருத்திட்டமொன்று றொட்டரி கழகத்தின் நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சும் இந்தியாவின் 3201 மாவட்ட சர்வதேச றொட்டரி கழகம் மற்றும் RID 3220 கொழும்பு மேற்கு றொட்டரி கழகத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு அங்கிகாரம்.

### 03.குளங்களை சுத்தப்படுத்தல்

கிராமிய விவசாயப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக 5,000 கிராமிய நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்களை துரிதமாக மறுசீரமைக்கும் வேலைத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பல காலமாக மண் அரித்துக் கொண்டு வரல், நீரியல் தாவரங்கள் மற்றும் பாசிகள் வளர்வதாலும், அவை உக்கலடைவதாலும் நிரம்பிப் போயுள்ள குளப்படுக்கையை அகழ்ந்து குறித்த குளங்களின் கொள்ளவை அதிகரித்தல் போன்றன இக்குளங்களின் கீழ் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகளின் முக்கிய வேண்டுகோள்களாக அமைந்துள்ளது.

அதற்காக குறித்த குளங்களில் படிந்துள்ள குளப்பொருக்கு மண்ணை அகற்றி ஏற்றிச் செல்ல வேண்டியுள்ளதுடன், அவ்வாறு அகற்றப்படும் குளப்பொருக்குகள் உள்ளிட்ட பொருட்களை மட்பாண்ட கைத்தொழில், மணல் அரித்தெடுத்தல், சேதன உரத்தயாரிப்பு மற்றும் வீதி அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகளுக்கான மூலப்பொருட்களாக பயன்படுத்துவதற்கான இயலுமைகள் காணப்படுகின்றன.

அதனால், நீர்ப்பாசன அமைச்சின் கீழ் எதிர்வரும் 03 வருடங்களில் 2,000 குளங்களின் குளப்படுக்கையை துப்பரவாக்கல் மற்றும் கொள்ளவை அதிகரித்தல் போன்றவற்றுக்கு நடவடிக்கை எடுப்பதற்கான யோசனைக்கு அங்கிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

### 04.காணித்துண்டுகளை ஒதுக்கி வழங்கல்

'பிராந்திய கைத்தொழில் சேவைகள் குழு' மற்றும் 'அமைச்சின் கருத்திட்ட மதிப்பீட்டுக் குழு' போன்றவற்றால் 24 கருத்திட்ட யோசனைகளை ஆராய்ந்து குறித்த கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 10 கைத்தொழில் பேட்டைகளில் காணித்துண்டுகளை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அந்த பரிந்துரைகளுக்கமைய ஏற்புடைய முதலீட்டாளர்களுக்கு 35 வருட நீண்டகால குத்தகையின் அடிப்படையில் காணித்துண்டுகளை ஒதுக்கி வழங்குவதற்கு அங்கிகாரம்.

### 05.குத்தகை அடிப்படையில் வழங்கல்

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின், வீரகெட்டிய பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள வெஹெரகொட தோட்டம் எனும் பெயரிலான 131 ஏக்கர் 2 ரூட் 29 பேர்ச்சர்ஸ் காணியானது, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்காணியை விவசாய தொழிற் பயிற்சி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்காக பெற்றுக்கொடுக்குமாறு ஸ்ரீ ஜினரத்ன கற்கைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை வேண்டுகோள் சமர்ப்பித்துள்ளது. அதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 08.ஒதுக்கீட்டுச் சட்டமூலம்

2021 ஜூலை மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் 2022 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை தயாரிப்பதற்கான அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 09.சேதன உரம் விநியோகம்

பெரும் போகத்திற்கான சேதன உரம் மற்றும் இயற்கைக் கனிமங்கள் மற்றும் தாவர ஊட்டற் பதார்த்தங்களை இறக்குமதி செய்வதற்காக அங்கிகாரம் வழங்கப்பட்டது. அதற்கமைய, நெற்செய்கைக்குத் தேவையான சேதன உரம் அரச உரக்கம்பனியால் இறக்குமதி செய்வதற்கும், ஏனைய பயிர்களுக்கு அனுமதிப்பத்திரம் கொண்ட உரக்கம்பனிகளால் சேதன உரங்களை இறக்குமதி செய்து போட்டி விலைமனுக் கோரலின் அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஏனைய பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்குத் தேவையான சேதன உரத்தை தாமதமின்றி போட்டி விலையின் கீழ் விநியோகிப்பதற்கு இயலுமான வகையில் இரண்டு அரச உரக்கம்பனிகள் மூலம் ஏனைய பயிர்களுக்குத் தேவையான சேதன உரத்தை இறக்கமதி செய்வதற்காகவும் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சமர்ப்பித்த யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 10. ஆபத்தான பட்டியலில் 71 தொழில்கள்

2021 ஜனவரி மாதம் தொடக்கம் சிறுவர்களைத் தொழிலில் அமர்த்தலுக்கான குறைந்தபட்ச வயது 16 வரை உயர்த்தப்பட்டுள்ளது. அதன்பின்னர் அபாயகரமான தொழில் கட்டளைகள் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய, 16-18 வரையான இளைஞர்களுக்கு 51 ஆபத்தான தொழில்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன், குறித்த தொழில்களில் ஈடுபடுத்தல் சட்டத்தில் தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டுள்ளது.

10 வருடங்களுக்கு முன்னர் அடையாளங் காணப்பட்டுள்ள குறித்த கட்டளைகளை மேலும் திருத்தியமைத்து வீட்டுப்பணி, ஒப்பனை அலங்காரத் தொழில்கள் மற்றும் கணினி மற்றும் ஏனைய இலத்திரனியல் உபகரணங்களுடனான தொழில் உள்ளிட்ட தொழில்களை சமகாலத்திற்கு ஏற்ற வகையில் புதிய 20 தொழில்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. அதற்கமைய, ஆபத்தான தொழில்கள் பட்டியலை 71 வரைக்கும் விரிவாக்கம் செய்து சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள கட்டளைகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 11. குத்தகை கட்டடம்

குத்தகை அடிப்படையில் வழங்கப்படும் கட்டடத்தொகுதிக்கான உரிமத்தை துரிதமாக மீளப் பெறுவதற்கான புதிய சட்டமொன்றை வகுப்பதற்கான அடிப்படை சட்டமூலமொன்று நீதி அமைச்சர் அலி சப்ரியினால் நியமிக்கப்பட்ட வீட்டு வாடகை தொடர்பான சட்ட ஆலோசனைக் குழுவால் தயாரிக்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டம் வகுக்கப்படுவதன் மூலம் முறையான நடபடிமுறைகளின் கீழ் பொதுவான வாடகை மற்றும் வெளியேற்றல் போன்ற வழக்கு நடவடிக்கைகளில் ஏற்படும் சட்டத் தாமங்களைத் தவிர்த்து குறுகிய காலத்தில் குத்தகைதாரருக்கு சலுகை வழங்குவதற்கு இயலுமை கிட்டும். அதற்கமைய, குறித்த பணிக்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக சமர்ப்பித்த யோசனைக்கு அங்கிகாரம்.

### 16.வாடகைச் சட்டத்தில் திருத்தம்

தற்போது வீட்டு வாடகைச் சட்டத்தில் காலங்கடந்த ஏற்பாடுகள் மூலம் வீட்டுத் துறைக்கு, வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள கட்டிடத்தொகுதிகளுக்கும் சொத்துப் பரிவர்த்தனைகளிலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

அதனால், சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் குறித்த சட்டத்தை திருத்த வேண்டிய தேவை அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, வீட்டு வாடகைச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 17.சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாடு

தற்போது உள்ளூரில் நிலவும் அரிசித் தட்டுப்பாடு தொடர்பாக அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது. தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு, தட்டுப்பாடின்றி போதியளவு அரிசித் தொகையை நுகர்வோருக்கு விநியோகிப்பதற்கும், மேலதிக களஞ்சிய இருப்பைப் பேணுவதற்கு இயலுமான வகையில் 100,000 மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

பெங்களூரு

# தமிழகத்துக்கு தண்ணீர் வழங்க உத்தரவு


"தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நிலுவையில் உள்ள 37.3 டிஎம்சி நீரை உடனடியாக வழங்க வேண்டும். நான்கு மாநிலங்களும் ஒப்புக் கொண்டால் மட்டுமே மேகதாது திட்டம், காவிரி குண்டாறு இணைப்பு திட்டம் ஆகியவற்றை பற்றி விவாதிக்க முடியும்" என்று காவிரி மேலாண்மை ஆணையத் தலைவர் எஸ்.கே.ஹல்தர் உத்தரவிட்டுள்ளார்.

காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 14ஆவது கூட்டம் டெல்லியில் உள்ள மத்திய நீர்வள ஆணையத்தின் அலுவலகத்தில் ஆணைய தலைவர் எஸ்.கே. ஹல்தர் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் தமிழக பொதுப் பணித் துறை செயலாளர் சந்தீப் சக்சேனா, காவிரி தொழில்நுட்பக் குழு தலைவர் சுப்பிரமணியன் உள்ளிட்டோரும் கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநில அரசுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

அங்கு உரையாற்றிய சந்தீப் சக்சேனா, "கடந்த மாதம் நடந்த கூட்டத்தில் ஒகஸ்ட் மாதம் வரை நிலுவையில் உள்ள 30.6 டிஎம்சி நீரை தமிழகத்துக்கு வழங்க கர்நாடகாவுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டது. ஆனால், கர்நாடகா முறைப்படி தண்ணீரை வழங்கவில்லை. இது உச்ச நீதிமன்ற தீர்ப்பை மட்டுமல்ல, காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவையும் அவமதிக்கும் செயல்.

தமிழகத்துக்கு 37.3 டிஎம்சி நீரை கர்நாடகா இன்னும் வழங்க வேண்டியுள்ளது. கர்நாடகாவில் மழை பெய்து வருவதால் நிலுவையில் உள்ள நீரை உடனடியாக வழங்க உத்தரவிட வேண்டும். அதேபோல ஒக்டோபரில் வழங்க வேண்டிய 20 டிஎம்சி நீரையும் முறையாக வழங்க வேண்டும். காவிரி டெல்டா பகுதியில் சம்பா, குறுவை சாகுபடிக்கு நீர் தேவைப்படுவதால் கர்நாடக அரசு உடனடியாக நீரை திறக்க உத்தரவிட வேண்டும்" என வலியுறுத்தியதை அடுத்தே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



புதுடெல்லி

## கொரோனாவால் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு ரூ.50,000 நிவாரணம்

அனைத்து மாநில அரசுகளும் தங்களது மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து கொரோனாவால் உயிரிழந்த குடும்பங்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் நிதி உதவி வழங்க வேண்டும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.



கொரோனாவால் உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன.

இதை விசாரித்த நீதிபதிகள், மத்திய அரசு நிதி உதவி வழங்குவதற்கான அறிவிப்பை வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

இதில் மத்திய அரசு தயக்கம் காட்டியதை அடுத்து கொரோனாவால் உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் வழங்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இதனையடுத்தே மத்திய அரசின் உள்துறை துணைச் செயலாளர் ஆசீஷ்குமார் சிங் அனைத்து மாநில தலைமைச் செயலாளர்களுக்கும் ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்.

பஞ்சாப்

## காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து நவ்ஜோத் சிங் சித்து இராஜினாமா

பஞ்சாப் மாநில காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் நவ்ஜோத் சிங் சித்து, தனது பதவியை திடீரென இராஜினாமா செய்துள்ளார்.



ஒரு மனிதன் எப்போது சமரசங்கள் செய்து கொள்கிறானோ அப்போது அவனது நன்மதிப்பும் பாதிப்புக்கு உள்ளாகும். நான் பஞ்சாப்பின் எதிர்காலம் மற்றும் பஞ்சாப்பின் நலனில் என்றும் சமரசம் செய்துகொள்ள மாட்டேன் என்று கட்சியின் தலைவர் சோனியா காந்திக்கு எழுதியுள்ள கடிதத்தில் நவ்ஜோத் சிங் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, பஞ்சாப் பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் பதவியை நான் இராஜினாமா செய்கிறேன். நான் தொடர்ந்து காங்கிரஸுக்கு தொண்டாற்றுவேன் என்றும் கடித்தத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பஞ்சாப் காங்கிரஸில் நவ்ஜோத் சிங் சித்துவுக்கும் முன்னாள் முதல்வரும் கட்சியின் மூத்த நிர்வாகியுமான அமரீந்தர் சிங்கிற்கும் இடையில் நிலவி வந்த மோதல் போக்கால் அமரீந்தர் சிங், தனது முதல்வர் பதவியை சில நாட்களுக்கு முன்னர் இராஜினாமா செய்தார். அதைத் தொடர்ந்து தற்போது சித்துவும், தனது தலைவர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

மதுரை

## மாற்றுத் திறனாளிகளுக்கு நகரும் கழிப்பறை

வீடு, பொது இடங்களில் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்துவதற்காக நகரும் நவீன கழிப்பறையை மதுரையைச் சேர்ந்த மின்னியல் வல்லுநர் எம். அப்துல் ரசாக் கண்டுபிடித்துள்ளார்.




ரயில், பஸ், விமான நிலையங்கள், வைத்தியசாலைகள், வர்த்தக நிறுவனங்கள், திருமண மண்டபங்கள் போன்ற பொது இடங்களில் மக்கள் பயன்பாட்டுக்கென இந்திய வகைக் கழிப்பறைகளும், முதியோருக்கு மேற்கத்திய வகைக் கழிப்பறை வசதிகளும் ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால் இந்தக் கழிப்பறைகளை அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளும் பயன்படுத்துவதில் சிரமத்துக்கு ஆளாகின்றனர்.

இதைத் தவிர்க்கும் விதமாக நவீன நகரும் கழிப்பறைக் கோப்பையை வடிவமைத்து மதுரை பீபீ. குளம் பகுதியைச்சேர்ந்த எம். அப்துல் ரசாக்(50) சாதனை புரிந்துள்ளார். ஏற்கெனவே தண்டவாள விரிசல் கண்டறிதல், ராணுவ வீரர்களுக்காகப் பனி தாங்கும் கோட், ரைஸ் குக்கர், கடல் நீரில் எண்ணெய் பிரித்தெடுக்கும் கருவி உள்ளிட்ட பல்வேறு கருவிகளைக் அப்துல் ரசாக் கண்டுபிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமராவதி

## பிரம்மோற்சவ விழா ஏற்பாடுகள் தீவிரம் ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டிக்கும் அழைப்பு

திருப்பதி ஏழுமலையான் கோயிலின் புரட்டாசி மாத வருடாந்த நவராத்திரி பிரம்மோற்சவ விழா, கொரோனா விதிமுறைகளைப் பின்பற்றி ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15ஆம் திகதி கொடியிறக்க நிகழ்வுடன் நிறைவு பெறவுள்ளது.



தினமும் கோயிலுக்குள் காலையும், மாலையும் வாகன சேவைகள் நடைபெற உள்ளன. காலம் காலமாக இடம்பெறும் வழக்கப்படி, ஆந்திர அரசு சார்பில் மாநில முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி இம்முறை பட்டு வஸ்திரங்களை காணிக்கையாக வழங்க உள்ளார்.

ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி இரவு கருட சேவை நடைபெற உள்ளதால், அன்றைய தினம் மாலை ஜெகன் மோகன் ரெட்டி, தலையில் பட்டு வஸ்திரம் சுமந்து சென்று தேவஸ்தான அதிகாரிகளிடம் வழங்க உள்ளார்.

இதற்காக, திருமலை திருப்பதி தேவஸ்தான தலைமை நிர்வாக அதிகாரி ஜவஹர் ரெட்டி, அறங்காவலர் குழு தலைவர் ஒய்.வி. சுப்பாரெட்டி மற்றும் சிலர் அமராவதியில் உள்ள முதல்வரின் அலுவலகத்துக்கு சென்று, அவருக்கு பிரம்மோற்சவ அழைப்பிதழ் மற்றும் சுவாமியின் பிரசாதங்களை வழங்கி பிரம்மோற்சவத்துக்கு வரும்படி அழைப்பு விடுத்துள்ளனர்.

ஷாஜபூர்

## கொரோனாவால் மரணித்த மனைவிக்கு கோவில்

மத்தியப் பிரதேசத்தின் ஷாஜபூர் மாவட்டத்தைச் சேர்ந்த கணவர் ஒருவர் கொரோனாவால் மரணித்த தனது மனைவியின் நினைவாக கோயில் கட்டி வழிபட்டு வருகிறார்.

ஷாஜபூரில் இருந்து 3 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சம்ப்கேடா கிராமத்தைச் சேர்ந்த நாராயண் சிங் ரத்தோர் அவரின் மனைவியான கீதாபாய் என்பவருக்கே கோயிலைக் கட்டியுள்ளார்.

மனைவியின் பிரிவை ஏற்க முடியாத நாராயண் சிங், அவரது உருவிலான சிலை நிறுவி நாள்தோறும் வழிபட்டு வருகிறார்.

கோயிலில் கீதாபாய் சிலையை அமைப்பதற்கு முன்பு குடும்ப உறுப்பினர்கள் அனைத்து சடங்குகளையும் செய்ததுடன், அவர்கள் தினமும் சிலையை வணங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.






தென்கொரியா

# நாய் இறைச்சி விற்பனைக்கு முற்றுப்புள்ளி

தென்கொரியாவில் ஒவ்வோர் ஆண்டும் இறைச்சிக்காக 10 இலட்சம் நாய்கள் கொல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், அண்மைக் காலமாக அந்நாட்டு மக்கள், நாய் இறைச்சி உண்பதைத் தவிர்த்து வருவதாகவும் இதன்காரணமாக அந்நாட்டின் மிகப் பெரிய நாய் இறைச்சி நிறுவனங்கள் மூன்று மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் தென்கொரியாவில் நாய் இறைச்சி விற்பனை, ஏற்றுமதி, இறக்குமதிக்குத் தடைவிதிக்கத் திட்டமிட்டுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி மூன் ஜே இன் தெரிவித்துள்ளார்.



அமெரிக்கா

## பூஸ்டரை செலுத்திக் கொண்டார் பைடன்

அமெரிக்காவில் பெரும்பாலான மக்கள் 2 ஆம் கட்டக் கொரோனாத் தடுப்பூசியையும் செலுத்திக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் தற்போது அதிகரித்து வரும் உருமாற்றம் அடைந்த கொரோனாத் தொற்றுப் பரவலுக்கு எதிராக தடுப்பூசிகளின் செயல்திறன் குறைவாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளமையால் 3 ஆம் கட்டத் தடுப்பூசியாக பூஸ்டர் தடுப்பூசியை மக்கள் செலுத்திக் கொள்ள அந்நாட்டு சுகாதார அமைச்சு அண்மையில் பரிந்துரை செய்தது.

அந்தவகையில் 78 வயதான அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அண்மையில் 3 ஆம் கட்டத் தடுப்பூசியாக பூஸ்டர் தடுப்பூசியை செலுத்திக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் 60 மில்லியன் மக்கள் பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக் கொள்ளத் தகுதியானவர்களாக உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## சவப்பெட்டிக்குள் மாறிய தாயின் உடை

அமெரிக்காவின் வட கரோலினா பகுதியில், மேரி என்ற பெண், தன் மகள்களான ஜெனிபர் டெய்லர், ஜென்னெட்டா ஆர்ச்சர் ஆகியோருடன் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் மேரி உடல்நலக்குறைவால் கடந்த மாதம் உயிரிழந்துள்ளார். எனவே சகோதரிகள் இருவரும் தங்கள் தாயை அடக்கம் செய்வதற்காக அஹோஸ்கி என்ற சவ அடக்க இல்லத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

அப்போது தங்கள் தாயை புதைக்க வைக்கப்பட்டிருந்த சவப்பெட்டியில், அவர்களின் தாய் அணிந்திருந்த அதே ஆடையில் வேறு ஒரு நபரின் சடலம் இருப்பதைப் பார்த்து அதிர்ந்து விட்டனர்.



இதுபற்றி ஜெனிபர் தெரிவித்துள்ளதாவது: “இது எவ்வாறு நடக்குமென்று எனக்குத் தெரியவில்லை. அதில் வைக்கப்பட்டிருந்த நபருக்கும் எங்கள் தாய்க்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அவர் என் தாயை விட சிறியவராக இருந்ததால், நான் கண்டுபிடித்துவிட்டேன். அதன் பின்பு நாங்கள் புகார் கொடுத்ததால், உடனடியாக உடலை மாற்றி தந்தார்கள்” என்றார்.

பிரித்தானியா

## கொரோனாவை தடுக்க புதிய கண்டுபிடிப்பு

கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக பிரித்தானியாவில் மூக்கு வழியாகப் பயன்படுத்தும் ஸ்பிரே மருந்தை, போக்ஸ்பயோ என்ற நிறுவனம் கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மருந்தானது சுமார் 63 சதவீதம் பாதுகாப்புத் தன்மை கொண்டுள்ளது எனவும் 6 முதல் 8 மணி நேரம் வரை ஒருவர் இரண்டு நாசிகளிலும் இம் மருந்தைச் செலுத்திக் கொள்வதால் கொரோனாத் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்றும் கூறப்படுகின்றது.

குறித்த நிறுவனம் இந்தியாவில் இம்மருந்தினை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ்

## பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் மீது முட்டை வீச்சு



பிரான்ஸில் கண்காட்சி ஒன்றில் கலந்து கொண்ட அந்நாட்டு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் மீது, நபர் ஒருவர் முட்டை வீசிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸில் லியோன் நகரிலுள்ள உணவகமொன்றில் சர்வதேச உணவு வர்த்தகக் கண்காட்சி நேற்று முன்தினம் (27) நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொள்ள அந்நாட்டு ஜனாதிபதி மக்ரோன் சென்றிருந்தார். இதன் போது அக்கூட்டத்தில் இருந்த நபர் ஒருவர் மக்ரோன் மீது முட்டையொன்றை வீசியுள்ளார். எனினும் மக்ரோனின் தோள்பட்டையில் விழுந்த முட்டை உடையாமல் கீழே விழுந்தது.

இந்நிலையில் குறித்த நபரை மடக்கிப்பிடித்த பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓமான்


## மர்மக்குழிக்குள் நீர்வீழ்ச்சி

ஓமான் நாட்டில் உள்ள அல் மாரா பாலைவனத்தின் நடுவில் ‘பர்ஹுட்டின் கிணறு’ என்று அழைக்கப்படும் 112 மீற்றர் ஆழமும், 30 மீற்றர் விட்டமும் கொண்ட மர்மக் குழியொன்று உள்ளது.

வானிலிருந்து பார்த்தால் சிறிய துளை போன்று காணப்படும் இதனை ‘நரகத்தின் கிணறு’ (Well of Hell ) என்றும், இதில் பூதம் இருப்பதாகவும் உள்ளூர் மக்களிடையே கருத்து நிலவி வருகின்றது.

மேலும், இக் குழியிலிருந்து கடுமையான துர்நாற்றம் வீசிவருவதாகவும் அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் 10 பேர் கொண்ட ஆய்வாளர்கள் குழுவொன்று, இக்குழி பற்றி ஆய்வு செய்ய முடிவு செய்தது. இதன் பிரகாரம் குறித்த குழுவினர் தகுந்த பாதுகாப்புடன் குழியில் இறங்கினர்.





இதன்போது உள்ளே நீண்ட குகையொன்றும், நீர் வீழ்ச்சியொன்றும் ஏராளமான பாம்புகள், இறந்த விலங்குகளின் உடல்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.பி.எல்:

# றோயல்ஸை வென்ற சண்றைசர்ஸ்

இந்தியன் பிறீமியர் லீக்கில், ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸுடனான போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத் வென்றது.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: றோயல்ஸ்

றோயல்ஸ்: 164/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: சஞ்சு சாம்ஸன் 82 (57), யஷஸ்வி ஜைஸ்வால் 36 (23), மஹிபால் லொம்றோர் ஆ.இ 29 (28) ஓட்டங்கள். பந்துவீச்சு: புவ்னேஷ்வர் குமார் 1/28 [4], ரஷீட் கான் 1/31 [4], ஜேஸன் ஹோல்டர் 0/27 [4])

சண்றைசர்ஸ்: 167/3 (18.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜேஸன் றோய் 60 (42), கேன் வில்லியம்ஸன் ஆ.இ 51 (41) ஓட்டங்கள். பந்துவீச்சு: மஹிபால் லொம்றோர் 1/22 [3], முஸ்தபிசூர் ரஹ்மான் 1/26 [3.3], சேட்டன் சகரியா 1/32 [4])

போட்டியின் நாயகன்: ஜேஸன் றோய்

இந்நிலையில், டுபாயில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரை ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட

## கரப்பந்தாட்ட மைதானங்கள் பல திறந்து வைப்பு

எப். முபாரக்

ஆரோக்கியமான தலைமுறையொன்றை கட்டி எழுப்பும் நோக்குடன் நாடளாவிய ரீதியில் 335 கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட கரப்பந்தாட்ட மைதானங்கள் பல, இளைஞர் மற்றும் விளையாட்டு ,அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மேற்பார்வை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவால் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.





கோமரன்கடவெல, குச்சவெளி நாவற்சோலை, திருகோணமலை பட்டிணமும் சூழலும் வெள்ளைமணல் ,கந்தளாய் லீலாரத்ன மைதானம், சேருவில மற்றும் வெருகல் ஆகிய பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்ட கரப்பந்தாட்ட மைதானங்கள் இவ்வாறு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

இதற்காக ஒரு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கு 15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிராமிய மற்றும் பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக்குழு தலைவருமாகிய கபில நுவன் அத்துகோரல, மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள, பிரதேச அரச அதிகாரிகள் உட்பட விளையாட்டு வீரர்களும் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

தேசிய கபடி அணிக்குத் தெரிவான

## வீராங்கனைகளும் பயிற்றுவிப்பாளரும் கௌரவிப்பு

மு. தமிழ்ச்செல்வன்

இலங்கை தேசிய கபடி அணிக்கு தெரிவு செய்யப்பட்ட வீராங்கனைகளும்,பயிற்றுநர் பரஞ்சோதி அவர்களும் கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தால் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

றோட்டறிக் கழக உறுப்பினரும் கொடைவள்ளலுமான எஸ். கே நாதனின் நிதி அனுசரணையில் கிளிநொச்சி நகர றோட்டறி கழகத் தலைவர் ஜெயசுந்தர தலைமையில் கரடிப்போக்கிலுள்ள றோட்டறி நிலையத்தில் இந்த கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. கழகத்தின் தொடக்க தலைவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி மற்றும் கடந்த கால தலைவர்கள், கழகத்தின் அடுத்த ஆண்டு தலைவர் வண. பிதா.ஜோசுவா உறுப்பினர்கள் கலந்து வீராங்கனைகளை வாழ்த்தி கௌரவித்தனர்.










முதல் கட்டமாக வீராங்கனைகளுக்கு ஊக்குவிப்பு தொகை வழங்கப்பட்டது, தொடர்ந்தும் இவர்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்யவும் கழகம் முன்வந்துள்ளது, அத்தோடு மூவருக்குமான ஒரு வருடத்துக்குரிய சத்துணவை வழங்கும் ஏற்பாட்டை கழகமூடாக வைத்தியர் சத்தியமூர்த்தி வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

எல்.பி.எல்:

## யாழ். அணியை வாங்கிய சுபாஸ்கரன்



இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான லங்கா பிறீமியர் லீக்கின் (எல்.பி.எல்), யாழ்ப்பாணத்தை அடிப்படையாகக் கொண்ட அணியை இலங்கையில் பிறந்த பிரித்தானிய தொழில்முனைவரான அல்லிராஜா சுபாஸ்கரன் வாங்கியுள்ளார்.

எல்.பி.எல்லின் முதலாவது பருவகாலத்தில் யாழ்ப்பாணத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ஜஃப்னா ஸ்டாலியன்ஸ் சம்பியனாகியிருந்த நிலையில், இனி அவ்வணி ஜஃப்னா கிங்ஸ் என்றழைக்கப்படும் எனத் தெரிகிறது.

லைக்கா குழுமத் தலைவரான சுபாஸ்கரன் யாழ்ப்பாண அணியை வாங்கியதன் மூலம் அவ்வணிக்கு மேலதிக நிதி மூலம் கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அலைபேசி நிறுவனத்தை நடாத்தி வரும் சுபாஸ்கரன், இந்தியாவின் தமிழ்நாட்டில் திரைப்படங்களைத் தயாரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை

## கிரிக்கெட் அணிக்கு சீருடை, விளையாட்டு உபகரணங்கள்

எம்.எல்.எஸ். டீன்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை கிரிக்கெட் அணிக்கு சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஆஷாத் எம் ஹனீபாவால் வைத்தியசாலை நலன்புரி சங்கத்திடம் வழங்கிவைக்கப்பட்டது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் பொது வைத்திய நிபுணராக கடமையாற்றிச் சென்ற டொக்டர் எம். அஹமட் பரீட்டின் அனுசரணையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அக்கரைப்பற்று கிளையின் ஏற்பாட்டில் வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்துக்கு இப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.



இதில், நலன்புரிச் சங்கத்தின் தலைவர் வைத்தியர் அப்துல் றசாக் மற்றும் வைத்தியர்கள், தாதியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 29 செப்டெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.